மீண்டும்

கண்ணகி!

புவனன்

மீண்டும்

கண்ணகி!

புவனன்

காணிக்கை!

"இந்நூலை, "அவதூறுகளுக்கு
இலக்காகி ஆற்றாது
அழும் மகளிரின் கண்ணீருக்குக்
காணிக்கையாக்குகிறோம்"

முதற்பதிப்பு: ஜனவரி 1988

உரிமை : ஆசிரியருக்கு

விலை ரூ. 5-00

விவரங்கட்கு: நிர்வாகி
'வாய்மையகம்'
வாட்டர்டாங்கு சமீபம்
நாகர்கோவில் - 629 001.

முன்னுரை

"மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"

இது கவிமணியின் பாடல் வரிகள். இங்கே நடப்பது என்ன? கருவில் வளரும் குழந்தை பெண் என்று கண்டால் கலைத்து விடுகிறார்களாம். பூதாகரமாகி விட்டிருக்கும் பிரச்சனை. இப்போது பழைய பிரசவ வீடுகள் நமது நினைவுக்கு வருகிறது. பெண் குழந்தை பிறந்தால் கலகலப்பே இருக்காது. எல்லோருக்கும் குரல் தாழ்ந்துவிடும். மருத்துவச்சிக்கு வகூல் கம்மியாகி விடுமே என்ற கவலை. மற்றவர்களுக்கோ புதிய சுமை ஒன்று ஏறிவிட்டதாகப் பெருமூச்சு. ஒப்பாரிகூட வைப்பதும் உண்டு.

இங்கு பசு பெண்கன்று போட்டால் கொண்டாட்டம். கோழியில் பெட்டைக் குஞ்சு என்றால் இரட்டிப்பு மகிழ்ச்சி. பனையில் பெண் பனை, ஆம், பருவப்பனை என்றால் மிக அருமை. மனிதரில் மட்டும் பெண் என்றால் மலிவாகி விடுகிறதே!

இந்த பெண் குழந்தைகளை, சின்ன வயதிலே சமையல் கட்டில் பானை சட்டி கழுவ, எச்சில் பாத்திரம் கழுவ, தேய்க்க, துடைக்க, தெளிக்க பயன்படுத்துவார்கள். இது மகளிருக்கு ஒதுக்கப்பட்ட பணிகள்.

இனி, பருவமடைந்தால், வீட்டிலானாள் என்பார்கள். இதுவரைக்கும் காட்டில் இருந்த மாதிரி. வெளியே போய்விடக்கூடாது. பூச்சாண்டி பிடித்துவிடும் என்றா? அது இல்லை. பெண்கள் கழங்கப்பட்டுப் போவார்களாம். வீட்டிலும் மறைவான இடங்கள்தான். வருவார் போவார் பார்த்துவிடக்கூடாது. கண்பட்டாலே கற்பு அழிந்துவிடும் என்று கருதிய காலமும் இருந்தது. இதனால் ஏடறிய, எழுத்தறிய என்னும் வகையறியக் கூடாதவர்களானார்கள். சிரிப்புக்குக் கூட தடை, பொம்பளை சிரித்தால் போச்சு.

இந்த வீட்டுக் காவல் முடிந்து விவாகம் நடக்கும். இதில் மகளிருக்கு கொத்தடிமை நிலைதான். மாமியார் ஒரு முதலாளி. இவள் வேலைக்கு மட்டுமல்ல அடிக்கடி கொண்டுவந்த (வரதட்சணை) கணக்கும் எடுப்பாள். இனி கணவனோ, காலால் எட்டி உதைப்பான், தட்டோடு உணவைத் தலைவழியே கொட்டுவான். இதை வழித்தெறிந்துவிட்டு திரும்பவும் உணவுபோட்டுத் தரும் மகளிர் ஏராளம். ஆம், ''கல்லானாலும் கணவன். புல்லானாலும் புருஷன்.'' இன்னும் மகளிர் புத்திக்கு வேறு சர்டிபிக்கட். பெண்புத்தி பின்புத்தியாம்.

இப்போது பெண்கள் புகுந்த துறைகளில் எல்லாம் முத்திரை பதிப்பதைப் பார்க்கிறோம். படிப்பில் முதலிடம். பணியில் முதலிடம். முழுவதும் பெண்களே நடத்தும் கான்வென்ட் பள்ளிக்கூடங் களே முந்திநிற்கிறது. கணவனும் மனைவியும் சேர்ந்து நடத்தும் மருத்துவ மனைகளில் கணவன் டாக்டரைவிட, மனைவி டாக்டரே முக்கியத்துவம் பெறுகிறார்.

இன்று பெரும்பாலும் சோதிடர்களின், சாமி யார்களின் வழிகாட்டுதலைத் தான் அரசியல் தலைவர்கள் நம்பி இருக்கிறார்கள். இந்த நிலை மையில் தாங்கள் பிரதமர் ஆனது அதிர்ஷ்டமா? என்று திருமதி தாட்சரிடம் கேட்க, இல்லை. எனக்கு அறிவு ஆற்றல் இருக்கிறது என்று எவ் வளவு ஆணித்தரமாக பதில் அளிக்கிறார். இந்திய அரசியலில் விழுந்தும், எழும்பி, வெற்றியை நிலை நாட்டி வியக்க வைத்த பிரதமர் இந்திராவை நாம் பார்க்கவில்லையா? பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதி அகினோவின் கிடிக்கிப்பிடியில் பழைய ஜனாதிபதி மார்க்கோஸ் படும்பாடு தெரிய வில்லையா? இலங்கையில் சிரிமா, பாகிஸ்தானில் பெனாசீர், பங்களாதேசில் ஹசீனா என்று ஆளுவோருக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்வது மகளிர் இல்லையா? இவையெல்லாம் பின் புத்தி யையா காட்டுகிறது? இதனால் சொந்தக்காலில்

நிற்க வாய்ப்பளித்தால், பெண்கள் யாருக்கும் சுமையாக இருக்கமாட்டார்கள். சுமைதாங்கிகளாகத்தான் இருப்பார்கள்.

இங்கு தாயில்லா வீடுகள், மனைவியை இழந்தவரின் மனைகளைப் பாருங்கள். இருள்தான் கவ்வி விட்டிருக்கும். இதனால்தான் பெண்ணை ''குடும்ப விளக்கு'' என்று கவிஞர்கள் வர்ணித்தார்கள் போலும்? இப்படி வீடுகள் மட்டுமல்ல, நாடுகளும் மகளிரால் வெளிச்சம் பெற வேண்டும். அவர்களை வெளியே வர அனுமதியுங்கள். அவர்களுக்கு வழிவிடுங்கள். வாழ்த்துவோம், மகளிரை.

வணக்கம்

இவண்,
வெளியிடுவோர்

மீண்டும்

கண்ணகி!

காட்சி - 1

(இசை மணி இல்லம்)

(படுக்கையில் இசைமணி. பக்கத்தில் மனைவி, பொன்னி)

பொன்னி : இன்னுமா, எழும்பல்ல, மணி எட்டாகுதே !

இசைமணி : இதோ எழும்பிட்டேன். (படுக்கையில் உட்கார்ந்து கொண்டே) இரவு தூக்கம் கம்மி. இதனால் காலையில் கொஞ்சம் தூங்கி'ட்டேன்.

பொன்னி : இரவு தூக்கத்துக்கு என்ன வந்தது ?

இசைமணி : அந்த கண்ணகி விசயமா'த்தான்.

பொன்னி : எந்த கண்ணகி? எதிர் வீட்டுக் கண்ணகியா ?

இசைமணி : இல்லை. நீ இரையாதே. இது என் கதையில் வருகிற கண்ணகி.

பொன்னி : கதையில் வருகிற கண்ணகியா ? சொல்லுங்க.

இசைமணி : இல்லாமல் மற்ற கண்ணகிகளைப் பற்றி எனக்கு என்ன கவலை? இது அந்தக்காலத்துக் கண்ணகி. அசல் கண்ணகி.

பொன் : அசலோ, வட்டியோ. அடுத்தவங்க வழக்குக்கு வராமல் இருந்தால் சரிதான்.

இசை : இதுதான் பொதுவான கண்ணகியாச்சே சிலப்பதிகாரக் கண்ணகி.

பொன் : சிலப்பதிகாரம் தான் முடிந்த கதையாச்சே.

இசை : அதைத்தான் அறிவுபூர்வமான சில மாற்றங்களுடன் தொடரப்போகிறேன்.

பொன் : இளங்கோவடிகளுக்குப் போட்டியாகவா ?

இசை : இதில் எந்த போட்டியும் இல்லை. இன்னும் எல்லாரும் ஏற்றுக்கொள்ளும்படி யாகத்தான். இவ்வளவு ஆற்றல் வாய்ந்த கண்ணகி, இடையில் வாழ்வை முறித்துக் கொள்வதா ? வாழ்ந்து முடித்திருக்க வேண்டாமா ?

பொன் : இதற்கு என்ன பண்ணப் போறீங்க?

இசை : இறுதிவரை கண்ணகியை வாழவைத்துக் காட்ட விரும்புகிறேன்.

பொன் : இப்பத்தான், எங்க வீட்டுக்கண்ணகி, எங்க ஊர் கண்ணகின்னு ஏகப்பட்ட கண்ணகிகளைக் காட்டுகிறார்களே.

இசை : அது படம். இது பாடம்.

பொன் : என்ன பாடம் நடத்துறீங்களோ, எங்கே பார்த்தாலும் ஏச்சுப்பேச்சுக்குக் குறைவு இல்லை,

இசை : உண்மையைச் சொன்னால் பொல்லாதவன்.

பொன் : இங்கேதான் உண்மை தேவை இல்லையே. இன்னும் உண்மையை சொன்

னால் யார் கேட்கிறது? ஃபோர் அடிக்காதா, என்ன?

இசை : இந்த தலைமுறைக்கு ஃபோர் அடிக்கிறது, வருகிற தலைமுறைக்கு ஜோரா இருக்கும். பார்.

பொன் : இந்த தலைமுறையில் அல்லவா நாம் வாழ்ந்து முடிக்க வேண்டியது இருக்குது,

இசை : உம், வாழ்வை பார்த்தால் உண்மை இல்லை. உண்மையைப் பார்த்தால் வாழ்வு இல்லை.

பொன் : உற்சாகம் ஏற்படும் படியா எழுதுங்க என்கிறேன்.

இசை : உற்சாகத்தை மட்டும் பார்த்தால் மனசு நிறையாது இல்லையா?

பொன் : மனசைப் பார்த்தால் மடி நிறையாது இல்லையா?

இசை : இது சரிதான். மனசு நிறைந்தால் மடி காலி. மடி நிறைந்தால் மனசு காலி.

பொன் : இன்று எதற்கு மரியாதை இருக்குது, பாருங்க?

இசை : இனி மரியாதையைப் பார்த்தால் எல்லாம் போலி.

பொன் : இப்படித்தான் உங்களைத் திருப்திப் படுத்த முடியாது.

இசை : திருப்திபட வேண்டிய உலகமா, இது? திருத்தப்பட வேண்டிய உலகம்.

பொன் : திருத்துங்க. நம்மவும் வாழ்ந்துவிட்டுத் திருத்துங்க.

இசை : தியாகத்தைப் பார்த்துத்தான் திருந்து

வாங்க. நியாயத்தைப் பார்த்துத் திருந்த புத்தி வேண்டாமா ?

பொன் : இங்கே தியாகத்தைப் பார்த்து யாரும் திருந்தவில்லை. திரிந்துதான் போறாங்க. இதற்காக நாம் வாழ்வைத் துறக்க என்ன வந்தது ?

இசை : வாழ்க்கை என்பது வசதி வாய்ப்பைப் பெருக்குவது அல்ல, பொன்னி.

பொன் : இல்லாமல் வசதி வாய்ப்பைக் கெடுத்துக் கொள்ள வேண்டுமா ? இங்கேதான் வெறும் கையோடு இருந்தால் திரும்பியே பார்க்கமாட்டாங்களே. வேறு எப்படி திருத்தப் போறீங்க ?

இசை : உம். ஒண்ணைப் பார்த்தால் ஒண்ணு இல்லைதான்.

பொன் : ஆமா, இனி கண்ணகியை எங்கே போய் பிடிக்கப் போறீங்க ? சொர்க்கத்துக்குப் போகப் போறீங்களா ?

இசை : அங்கெல்லாம் ஏன் போக வேண்டும்? அதாவது கண்ணகியும் கோவலனும் ஆஸ்பத்திரிக்கு போவதாகத்தான் கதை.

பொன் : இது எப்படி? கோவலன்தான் விழுந்தாச்சே.

இசை : விழுந்தான். ஆனால் சாகல்ல. வெட்டுண்ட கோவலன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிழைத்துக் கொள்கிறான்.

பொன் : இல்லையே. சாகிறதாகத்தானே, கதை

இசை : இடையில் கண்ணகியைக் கண்டதும் கோவலன் எழும்பிப் பேசுகிறானா,

இல்லையா? இன்னும் திருட்டுக்கு கையைத் தறிப்பாங்களே தவிர, கழுத்தை அறுக்கமாட்டாங்க. இக்கால நவீன மருத்துவத்தில் கையை சுலபமாக ஒட்ட வைத்துவிடலாம். இப்படி கதையை ஓட வைத்து விடலாம்.

பொன் : இப்போது கோவலன் மேலோகத்தில் இருக்கிறானா, பூலோகத்தில் இருக்கிறானா?

இசை : அதாவது ஆஸ்பத்திரியில் இருக்கிறான்

பொன் : கண்ணகி

இசை : அவனுக்குப் பக்கத்தில் இருக்கிறாள்.

காட்சி 2

(மல்லிகா மருத்துவமனை)

(அ பிரிவு; அறை எண்· 12; படுக்கையில் சாய்ந்தவாறே உட்கார்ந்து இருக்கிறான், கோவலன். அருகில் கண்ணகி நிற்கிறாள். அவள் விழி நீர், அவன் பாதத்தை நனைக்கிறது.)

கோவலன் : என்ன, கண்ணகி இது? என்னுடைய பரிதாப கோலத்தைப் பார்த்து கண்ணீர் வடிக்கிறாயா? எவ்வளவு அலங்காரமாக இருப்பேன்? எப்படி அலங்கோலமாயிட்டேன்?

கண்ணகி ; எனக்கு வந்த ஆத்திரத்தை எண்ணி அழுகிறேன். அற்ப நேரம் மூண்ட கோபத்தில் என்ன அக்கிரமங்களை எல்லாம் நடத்தி முடித்து விட்டேன். மன்னர் குடும்பத்தை அழித்தேன். மதுரையை எரித்தேன். (விம்மி விம்மி அழுகிறாள்)

கோவ : பொய்க் குற்றம் சாட்டியவர்கள், பொறுப் பற்று தீர்ப்பு வழங்கியவர்கள், அந்த பொல்லாதவர்களைத் தாங்கி நின்ற பூமி போகட்டும். அழியட்டும். எரியட்டும். இதற்கு போய் நீ ஏன் அழ வேண்டும்? உன் பத்தினி தன்மையைக்காட்ட இது ஒரு சான்ஸ். அவ்வளவு தான் விடு.

கண் : இந்த பாதகங்களைச் செய்துமுடிக்கத் தானா. பத்தினித் தன்மை? இவை நடக் காமல் தடுக்கப் பயன்பட்டிருக்க வேண் டாமா? இதைவிட கேவலம், இல்லறத் தையே சரியாக நடத்த இயலாத பாவி யாகி விட்டேன். (அழுகிறாள்)

கோவ : இல்லறம் சரியாக நடந்திருந்தால் இவ்வ ளவு பெரிதாக விளம்பரம் பெற்றிருக்க முடியுமா? வீட்டுக்கு வெளியே உன் பெயர் வந்திருக்குமா? நாட்டில் எங்கும் உன் புகழ் பரவி இருக்குமா?

கண் : இந்த விளம்பரமும். புகழும் யார் கேட் டது? இங்கே நான் விரும்பியது எல்லாம் அமைதியான வாழ்க்கைதான்.

கோவ : இவ்வளவு விவரம் இல்லாத பெண்ணாக இருக்கிறியே. இங்கே விளம்பரம், புக ழுக்காக என்ன மாய்மாலம் எல்லாம் நடத்துகிறார்கள்.

கண் : இது வியாபாரத்துக்குச் சரி. நான் வாழ விரும்பினேன்.

கோவ : வாழ்க்கையே ஒரு வியாபாரம்தானே.

கண் : இருந்தால் நான் பிறந்ததற்கே வருந்து கிறேன். இது மொத்தத்தில் எனக்கு இழப்புதான்.

கோவ : இல்லை கண்ணகி. கணவன் என்றதும் கண்களை மூடிக்கொண்டாய். புருஷன் அழைத்ததும் புறப்பட்டு வந்தாய் போன கவுரவத்தை மீட்டுத் தந்தாய். இது பத்தினித்தன்மையின் அடையாளம்.

கண் : இதுவா, பத்தினித்தன்மை? இது பாமரத் தன்மை. இதனால் யாருக்கு நன்மை? கவுரவம் போகாமல் பார்த்திருந்தால் சரிதான்.

கோவ : இல்லாமலா, உனக்கு கோயில் கட்டுகிறார்கள், நகர் அமைக்கிறார்கள். சிலை எழுப்புகிறார்கள். இன்னும், என்ன என்ன மரியாதைகள் ?

கண் : இந்த மரியாதைகளால் எனக்கு என்ன பயன் ? வாழ்ந்து மரியாதை பெற வேண்டும்.

கோவ : இங்கே ஒன்றை இழந்துதான் ஒன்றை பெற முடியும். இதில் உனக்கு லாபம் என்கிறேன்.

கண் : இப்படி ஒருபுறம் மரியாதை. இனி மறுபுறம், கையாலாகதவள் என்று கண்டபடி விமர்சிக்கிறார்களே. கண்ணகி குற்றவாளியே என்று வழக்காடு மன்றம் நடத்துகிறார்களே. பார்க்கிறேனே.

கோவ : இந்தமாதிரி இடங்களுக்கு நாம் போகக் கூடாது. இது பொறாமைக்காரங்க பேசுவது. இவ்வளவு பெரிசா, பேசுகிறானே இப்போதும் தன் மனைவி கண்ணகி போல் இருக்கவேண்டும் என்றுதான் விரும்புகிறான்.

கண் : இருந்தும் எனக்கு என்ன மிச்சம்? நான் கண்டது அவ்வளவுதானே.

கோவ : இரு. இரு இனி சான்ஸ் வராமலா போகும்.

கண் : இனி எங்கே வருவது?

கோவ : இது என்ன, கண்ணகி விரக்தியில் பேசுகிறாய்? இன்னும் கைவிட்டுவிடுவேன்'னு பயப்படுகிறாயா? இனி எங்கும் போக மாட்டேன். உன் பக்கத்தில், உன்னைச் சுற்றிக் கொண்டே இருப்பேன். நான் உனக்கு மட்டுமே சொந்தம்.

கண் : இதை நெற்றியில் எழுதி ஒட்டிக் கொள்ளுங்கள்.

கோவ : நெற்றியில் என்ன, நெஞ்சிலே எழுதி விட்டேன்.

கண் : கொஞ்சம் சும்மா இருப்பீங்களா?

கோவ : இது என்ன பேதமோ? இன்னும் சந்தேகமோ? வேண்டுமானால் சத்தியம் பண்ணிக் கொடுக்கிறேன், போதுமா?

கண் : இத்தனைபேர் மத்தியில் பண்ணின திருமண சத்தியத்தையே தெருவோடு விட்டவங்கதானே. இனிவேறு புதுசா பண்ண இருக்குதா?

கோவ : ஆமாம். மொத்தத்தில் போட்டு உடைத்தவன்தான். பசுஞ்சோலையாக இருந்த வாழ்வு பாலைவனம் போலாகிவிட்டது. எல்லாமே பாழாக்கிவிட்டேன்.

கண் ; இனி சொல்லி என்ன பயன்?

கோவ : இரு கண்ணகி. இழந்த வாழ்வை மீட்டுத் தருவேன். சீரழிந்த நம் வாழ்வைச்

சித்திரச் சோலையாக்கிக் காட்டுகிறேன் பார். செங்கனிச் சாறு வழிந்தோடச் செய்கிறேன். உன் சிந்தை குளிரவைக்கிறேன். போதுமா ?

கண் : இது எந்த சினிமாவில் பேசுகிற வசனம் ?

கோவ: இல்லை, கண்ணகி. என் சிந்தையில் எழுகிற வசனம். சொந்தவசனம்.

கண் : இப்போது வாழ்விழந்து நிற்பது நான் மட்டுமல்ல; மாதவியும் மணிமேகலையும் கூட.

கோவ: இனிமேல் அந்த மாதவிப் பேச்சை எடுக்காதே. எனக்குப் பிடிக்காது.

கண் : இப்போது கண்ணகியா, மாதவியா, யார் மேல் என்று ஊருக்கு ஊர் பட்டிமன்றம் நடத்துகிறார்கள். வர வர மாதவியை மெச்சிப்பேசுகிறவர்கள் தொகைதான் பெருகி வருகிறது. உச்சிக்குப்போய் கொண்டிருக்கிறாள். நான் கீழேதான் வந்து கொண்டிருக்கிறேன்.

கோவ: இப்போதும் ஊருக்கு ஊர் கண்ணகி பெயர் வைக்கிறார்களே ! இன்னும் யாரும் மாதவி போல் பெண் கேட்கிறார்களா ? இதனால் உனக்குத்தான் சிறப்பு என்கிறேன்.

கண் : இருப்பினும் மாதவியும், மணிமேகலையும் நம்முடன் ஒன்றிவிட்டவர்கள். இனிமேல் அவர்களைப் பிரித்துப் பார்க்க எனக்கு முடியாது. இல்லாமலும் எந்தப் பெண்ணையுமே பிரித்துப் பார்க்க எனக்கு முடியவில்லை. எல்லோரையும் வாழவைத்துவிட மனசு துடியாய் துடிக்கிறது.

கோவ: இது பெரிய விபரீதமாப் போச்சே! இதனால் தான் வெளியே போகாதேன்னு சத்தம்

போட்டேன். வேண்டுமானால் ஒரு கோயில் குளத்துக்குப் போகலாம். இந்த மாதிரி போகக்கூடாத இடங்களுக்கெல்லாம் போய் மனசைக் குழப்பிக் கொண்டிருக்கிறாய்.

கண் : இளமையில் உங்களைப் பிரிந்து தனிமையில் தவித்த போதும், இந்த கோயில் குளம் நினைப்பு எனக்கு வரவில்லையே. இனி மேலா வந்துவிடப் போகிறது.

கோவ: இல்லாவிட்டால் முன்புபோல் கணவனே தெய்வம்'ன்னு இரேன்.

கண் : இருந்தேனே. இந்த தெய்வம் என்னைக் கைவிட்டதுமல்லாமல் களத்திலும் இறக்கி விட்டு விட்டதே.

கோவ: இது என்ன கண்ணகி? இன்னமும் கடந்த காலத்தையே நினைத்துக் கொண்டிருக்கிறாயே.

கண் : இல்லாமல் உடனுக்குடன் மறந்து விட வேண்டுமாக்கும்?

கோவ: இன்னமும் பெண்கள் கற்பைக் காப்பாற்ற கணவன் எரியும் கட்டையில் கூட இறங்கி மாய்கிறார்களே. உனக்கு களத்தில் இறங்கியது பெரிசா போச்சா.

கண் : இதில் நான் மட்டும் காப்பாற்றி என்ன ஆச்சு? இன்னும் கற்பைப் பற்றி என்ன பேச்சு?

கோவ: அது தானே என் உயிர் மூச்சு.

கண் : இப்படி உயிரை எங்கோ கொண்டுவைப்பது அழகாத் தெரியுதா ?

கோவ: இது பழகிப் போச்சு இல்லையா?

கண் : இதற்காக, நடந்து விட்ட தவறுகளுக்குப்

பரிகாரம் காணாமல் முடியுமா?

கோவ: பரிகாரம் காண்பது சரிதான். பழிவாங்காமல் இருக்கவேண்டுமே.

கண் : இந்த பயமும்கூட இருக்கிறதா? பரிதாபம். பரிதாபம்.

(இப்போது டாக்டர் இருநர்சுகளுடன் வருகிறார். கோவலனின் உடலைப் பரிசோதித்துப் பார்க்கிறார்)

டாக் : நன்றாகிவிட்டது. நாளை நீங்கள் போகலாம்.

கோவ: (படுக்கையில் இருந்து எழும்பி) நன்றி டாக்டர்.

டாக் : நான்தான் நன்றி சொல்ல வேண்டும். நாட்டில் முதல் முதலாக துண்டாகிப் போன கைகளை ஒட்ட வைக்க வாய்ப்பளித்துள்ளீர்கள்.

கோவ: ஏட்டிலே இடம் பெற வேண்டிய சாதனை! ஏன் ஒரு விழா நடத்தி இருக்கலாமே?

டாக் : இதற்கு வேறு கூட்டத்தைக் கூட்டச் சொல்றீங்களா?

கோவ: விளம்பரம்தானே உயிர்

டாக் : வியாபாரத்துக்கு அல்லவா, விளம்பரம் வேண்டும்?

கோவ: தொழிலுக்கும் நல்லதுதானே

டாக். : இது தொழில் அல்ல, தொண்டு.

கோவ: எதற்கும் பணம் இல்லாமல் முடியாதே.

டாக் : தொண்டுக்கு முதலில் வேண்டியது மனம். பிறகுதான் பணம்.

கோவ: நல்லது டாக்டர்

டாக் : சரி, வரேன் (புறப்பட்டுப் போகின்றனர்)

கோவ: பார்த்தியா, டாக்டரும் உன்னைப் போல வே பேசுகிறார்.

கண் : பாவம், என்னைப்போல் பாடாய்பட்டவர் போல் இருக்குது.

கோவ: ஆனால் படல்ல. அவருக்கு வாய்த்த மனைவி அப்படி

கண் : அது எப்படி என்கிறது போய் பார்த்தால் அல்லவா தெரியும்?

கோவ: இல்லாமலா, அந்த அம்மா பெயரில் ஆசு பத்திரி, வீடு எல்லாம் வைத்திருக்கிறார்?

கண் : வந்த புதிதில் எல்லாம் நடக்கும். வலம்புரி முத்தே, பொன்னே, மணியே'ன்னு நீங்க எனக்கு வைக்காத பெயரா?

கோவ: இனி உனக்கு ஒரு பாடும் இல்லை. சும்மா இரு.

காட்சி 3

(மாதவிக்குடில்)

(உள்ளே மாதவி. ஊர் கூட்டத்துக்கு வரும் படி சித்திராபதி வந்து கூப்பிடுகிறாள்)

சித்ரா : என்ன உங்களைக் காண'ல்ல? ஏன்'டி ஊர் கூட்டத்துக்கு வரல்லியா? எங்கே மணிமேகலை? என் மணி, எங்கே'டி?

மாதவி: எதுக்கு கூப்பிடுறீங்க?

சித்ரா : நானா கூப்பிடுறேன். நாடே கூப்பிடுது'டி.

மாதவி: என்னவாம்?

சித்ரா : என்ன ஊருக்குப் புதுசா வந்தவளை மாதிரி கேட்கிறியே! எல்லாரையும் போல வாழத்

தான்'டி. எழும்பு. புறப்படு.

மாதவி: நான் தான் சொல்லியாச்சே. நாங்க அதுக்கு ஆள் இல்லை.

சித்ரா: என்ன, நீ சொல்லிட்டா போதுமா? எல்லாரும் எதிர்பார்த்து காத்துக்கிட்டு இருக்காங்களே?

மாதவி: எங்களை எதிர்பார்க்க வேண்டாம்'னு சொல்லி விடு.

சித்ரா: ஏன்'டி இப்படியே இருந்து பாழாப் போறீங்களா?

மாதவி: நான்தான் பாழாய் போயிட்டேனே. இனி புதுசா போக என்ன இருக்குது?

சித்ரா: எப்படியோ நீ தொலைஞ்சு போ. என் பேத்தி, என் ராசாத்தி எங்கே'டி?

மாதவி: எனக்கு என்ன தெரியும்? நீ போய் கேள்.

சித்ரா: நீதானடி அவள் அம்மா. நீதானேபெற்றவள். நீ சொன்னால் வருவாளே.

மாதவி: அவள் கண்ணகியின் மகள், ஆமா.

சித்ரா: இனி எது கண்ணகி? இன்னும் அவளைக் கனவு கண்டுகொண்டிருந்தால் நடக்காது'டி வாழ வழியைப் பாருங்க

மாதவி: இவள் ரொம்ப வாழ்ந்து விட்டவள். இவள் பின்னால் போக வேண்டியது தான்.

சித்ரா: இல்லாமல் பரத்தைக்குப் பிறந்தவள் பரத்தை தான்'டி. பத்தினிக்கு மகளாக முடியுமா? இங்கே கூப்பிடு, அவளை.

மாதவி: இன்னும் சொல்கிறேன். திரும்பவும், திரும்பவும் சொல்கிறேன், துயரம் நிறைந்த கணிகையர் கோலம் மணிமேகலையை

அனுகவிட மாட்டேன் இது உறுதி. இதை ஊருக்குச் சொல்லிவிடு.

சித்ரா: இப்பம் நீ அவளை விடுறியா, என்ன?

மாதவி: இப்பம் நீ ஆளை விடுறியா, என்ன?

சித்ரா: செய்யும் தொழில்தான்'டி தெய்வம் தொழிலுக்குத் துரோகம் செய்யக்கூடாது'டி.

மாதவி: இந்தப் பாழும் தொழிலில் நான் பட்டழிந்தது போதாதா? என் மகளையும் பலியிட வேண்டுமா? உனக்கு கொஞ்சமாவது புத்தி இருக்குதா?

சித்ரா: எனக்கா, புத்தி இல்லை என்கிற? அம்மாவும் மகளும் சேர்ந்து ஊரை அழிச்சுப் போடாதுங்க'டி.

மாதவி: ஊஹும்! இன்னும் அழியாமல் இருக்கிற ஊர். உன் பாட்டுக்குப் போ'ன்னா போயேன்.

சித்ரா: ஒத்தமரம் தோப்பாகாது'டி. ஊர் ஓடினால் ஒத்து ஓட தெரிய வேண்டாமா?

(இப்போது மணிமேகலை வெளியே இருந்து வருகிறாள்)

மணி : இது தான் செத்த ஊராச்சே! இதுக்கு யார் ஒத்து ஓட முடியும் ?

சித்ரா: வாயும். வயறும் இருக்குதுல்ல'ம்மா.

மணி : அதுக்கு கையும் காலும் இருக்குதுல்ல.

சித்ரா: இவ்வளவு சொகுசும், சுகமும் கிடைக்குமா?

மணி : இந்த சொகுசும், சுகமும் பிணங்களுக்குத் தான் சரி.

சித்ரா: இன்னும் உங்களுக்கு என்ன மிச்சம் இருக்குது ? இந்த ஊர் சனங்கள் சிரியாச்

சிரிக்கிறாங்கடி.

மணி : சனங்களா ? சடங்கள்.

சித்ரா : இந்த ஊர் ராசகுமாரனே ஆசைப்பட்டு காத்து இருக்கான்'டி. உன்னை எதிர் பார்த்து இருக்கான். அள்ளி, அள்ளித்தரு வானே! அவனுக்கு கணக்கு பார்க்கணுமா, என்ன ? அழகுராணியா வாழலாமே.

மணி : ஆமா, கொஞ்சம் நாள் அழகுராணி. அப் புறம் தகரப்போணி.

சித்ரா : அவன் போனால் அடுத்தவன்தான்.

மணி : அப்புறம் ரேட் கம்மியாகுமே.

சித்ரா : இல்லாமல் வெள்ளிக்கும் தகரத்துக்கும் ஒரே விலை கிடைக்குமா ? இப்பம் கேட்கிற தெல்லாம் தருவானே.

மணி : இதோடு ஒரு பிள்ளையும் தருவானே.

சித்ரா : அதுவும் இப்படி பிழைக்கும். நம்ம குலம் தழைக்கும்.

மணி : இப்படி ஒரு பிழைப்பு பிழைக்கவும் வேண் டாம். இந்த குலம் தழைக்கவும் வேண்டாம்.

சித்ரா : இதில் ஒன்னும் குத்தமில்லை, கண்ணு. இப்படி இருந்தால் மண்ணா போயிடு வீங்க. இன்னும் பாரு நல்ல தொகை, உங்கம்மாவுக்கு கிடைச்சதை விட பெரிய தொகையா வாங்கிக் கொடுக்கிறேன்.

மணி : இந்த தொகையோடு சேர்த்து உன்னைப் புதைக்கவா?

சித்ரா : இல்லாமல் இப்படி குமரியா இருந்தே சாகப்போறியா?

மணி : இந்த குலத்தை ஒரு ஆட்டு ஆட்டி விட்டுத்தான் சாவேன்.

சித்ரா: ஊர் சனங்கள் சகிக்காதுடி.

மணி : இந்த சடங்கள் என்ன செய்யும் பார்க்கிறேன்.

சித்ரா : இது சாமிக்கே பொறுக்காத காரியம்.

மணி : அதை சாமியும் நாங்களும் தீர்த்துக் கொள்கிறோம். நீ போ.

சித்ரா : உங்களால் ஊர்மானமே போகுதுடி.

மணி : இருந்தால் தானே போகிறதுக்கு.

சித்ரா : நாறித்தான் போவீங்க.

மணி : இங்கிருந்து நாறாமல் போறியா, என்ன? இவ்வளவு கிழமானாலும் புத்தி மாறாமலே இருக்கிறியே.

சித்ரா : இது மாறாதுடி. நான் குலத்தில் பிறந்தவளாக்கும்.

மணி : ஆமா, குளத்தில் பிறந்தாள்.

சித்ரா : இரண்டுபேருமா ஊரை மறிக்கப் போறீங்களா ? ஒதுக்கிருவாங்கடி. ஒடுங்கிப் போவீங்க.

மாதவி: நாங்கள் ஒதுங்கியாச்சே, விடேன்

சித்ரா : அவன் ராசகுமாரன்'டி. வச்சகுறி தவறமாட்டான். ஆகாசத்துக்கு மேலே சந்திரனில் போய் ஒழிச்சாலும், அங்கே வந்தும் தூக்கிருவான்'டி சீக்கிரமா ஒரு முடிவுக்கு வந்துருங்க.

காட்சி 4

(கண்ணகி இல்லம்)

(உட்கார்ந்து இருக்கும் கோவலன், உற்று உற்றுப் பார்க்கிறான், கண்ணகியை)

கண் : என்ன அப்படி உற்றுப் பார்க்கிறீங்க ?

கோவ: இல்லை, உன் மார்பைத்தான் பார்க்கிறேன் இதில் ஒன்றைத் திருகி எறிந்து நீ மதுரையை எரித்ததாகச் சொல்கிறார்களே?

கண் : யார், சொன்னது?

கோவ: எல்லாரும் தான் சொல்கிறார்கள்.

கண் : இது ஒரு புரளி. எப்படியோ பரவி விட்டிருக்கிறது.

கோவ: இதைப் பொய் என்கிறியா?

கண் : இல்லாமல் திருகினவுடன் வருவதற்கு அது என்ன முந்திரிக்கொட்டையா? தீப்பிடித்து எரிவதற்கு அதில் பாஸ்பரஸ்ஸா இருக்கும்? இவ்வளவுக்கு புத்தி கெட்டுப் போகலாமா?

கோவ: வந்து புத்தி இருக்கிறவங்களும் சொல்றாங்களே!

கண் : இதில் எங்கே தவறு நடந்தது என்று தெரியாது. இருந்தாலும் இப்படி புத்தியைக் கடன் கொடுத்திட்டாங்களே. இது ஏதோ ஒரு பெண் தானே என்று நினைத்து விட்டார்கள். இதனால் யாருக்கும் வெட்கம் இல்லாமல் போய் விட்டது.

கோவ: இதற்கு நீ மறுப்பு சொல்லி இருக்கலாமே.

கண் : இதில் மறுக்கிறதுக்கு என்ன இருக்கிறது.

நான் உயிர் பிழைத்து வந்ததே பெரிசு.

கோவ: அப்படி என்ன ஆபத்து வந்தது?

கண் : அரசரைத் தொடர்ந்து அரசியும் விழுந்து இறந்தாங்களா? அப்புறம் எனக்கு எதுவுமே ஓடல்ல. அரச குடும்பத்தினரும், மக்களும் ஆர்த்தெழுந்துவிடக் கூடாதே; அந்த பயத்தில் வெடிக்குண்டை எடுத்து வீசிவிட்டு நடந்தேன்

கோவ: எது வெடிக்குண்டா ?

கண் : ஆமா, வெடிக்குண்டு.

கோவ: இதைத்தான் மக்கள் வித்தியாசமாக நினைத்துவிட்டார்கள்?

கண் : இருக்கலாம்

கோவ: இதை நீ என்னிடத்தில் சொல்லலியே.

கண் : இதற்கு அவசியம் வரல்ல. சொல்லல்ல.

கோவ: இந்த வெடிக்குண்டு உனக்கு எப்படி கிடைத்தது?

கண் : நீங்கள்தான் வீட்டில் தங்கிறது இல்லையே நான் தனியா இருந்தபோது ஒருநாள் சிவ காசி அத்தை வந்தாங்க. தற்காப்புக்காக இருக்கட்டும் 'னு தந்தாங்க.

கோவ: இதை நீ எங்கே வைத்திருந்தாய்?

கண் : என் கூடவேதான் இருந்தது. எங்கே வெறும் கையோடு வேந்தனை சந்திக்கச் சென்றால் விபரீதம் ஏற்பட்டு விடக் கூடதே என்று கருதி, வெடிக்குண்டை எடுத்துச்சென்றேன்.

கோவ: இது நமக்கு பெரிய லாபமாப்போச்சு.

கண் : இப்போது நினைத்தாலும் அவமானமாத் தெரியுது.

கோவ: பத்திரமாத்தான் இருக்குதா?

கண் : இல்லாமல்? இனியும் வதந்திகளை நம்பாதீங்க?

கோவ: இந்த வதந்தியால் தான் நீ வாழ்கிறாய். இல்லாவிட்டால் பின் தொடர்ந்து வந்து உன்னைத் தீர்த்துக் கட்டி இருப்பார்கள்.

கண் : உம்; வாழ்க்கையை நினைத்தாலே கேவலமா தெரியுது.

கோவ: இனி வந்து உன்னைப் பார்த்துத்தான் நெருங்க வேண்டியது இருக்குது.

கண் : இல்லாமலும் மற்றவங்க வசதியும் பார்த்து நெருங்குவதுதான் சரி.

கோவ: நான் வசதியைப் பற்றிச் சொல்லவில்லை. வெடிக்குண்டைப் பற்றிச் சொல்லுகிறேன்

கண் : இப்பம்தான் வெற்றிலைப் பாக்குக்கடை முதல் விமானநிலையம் வரைக்கும் வெடிக்குதே. இதனால் என்னை மட்டுமல்ல, எந்தப் பெண்ணையும் பார்த்து. நெருங்குவதுதான், சரி.

கோவ: இனி நான் எந்த பெண்ணையும் சிந்தையிலும் தொடுவதில்லை.

கண் : இது என்ன, திடீரென்று இராமர் வேடம்?

கோவ: இப்படி தீர்மானமே பண்ணிட்டேன், இன்னும் உனக்குப் புரியமுடியவில்லையா கண்ணகி?

கண் : (உரக்க) இப்படியே மாதவியை கைகழுவி விடலாம்'னு எண்ணமா?

கோவ: இல்லாமல்? மாதவி ஒரு பரத்தை. அவள் எதிர் பார்த்தது பணத்தை.

கண் : இல்லை. உங்களிடம் பறிகொடுத்து நிற்கிறாள், மனத்தை.

கோவ: பரத்தைக்கு எது மனம்?

கண் : இப்படி யாரையும் தாழ்வா பேசக்கூடாது, தெரியுமா?

கோவ: இல்லாமல் தலையில் தூக்கி வைத்துப் பேச வேண்டுமா?

கண் : இந்த மாதவிதான் ஏழு ஆண்டுகளாக உங்களோடு தோளோடு தோள் நின்று வாழ்ந்தவள். நாள் முழுவதும் கடற்கரை மணலில் உட்கார்ந்து கொண்டு உங்களுக்காக 'யாழ்' மீட்டியவள். உங்கள் வாழ்வில் சுருதி ஏற்றியவள். உங்களை இன்பக் கடலில் ஆழ்த்தியவள்.

கோவ: இது அவள் தொழில், செய்தாள். இல்லாமல் ஒசுக்காகவா, எல்லாம் காசுக்குத்தான். கூலிக்கு மாரடிக்கிறகூட்டம்.

கண் : கூலி எல்லாம் கூனி கையில்தான் போயிருக்கும்.

கோவ: அது அம்மா, மகள் விவகாரம். அவங்க முடித்துக்கொள்ளட்டும். நீ சும்மா இரு.

கண் : இப்போது அவள் அம்மாவிடம் இல்லையாம் தொழிலிலும் இல்லையாம். சதா உங்கள் நினைவிலே தான் இருக்கிறாளாம்.

கோவ; இதெல்லாம் உனக்குச் சொன்னது, யார்? நீயும் ஊர் சுற்றத் தொடங்கி'ட்டியா?

கண் : இல்லை. ஊரில் இருந்துவந்த தகவல்.

இனி மணிமேகலை வேறுவாழா வெட்டியா திரிகிறாளாம்.

கோவ: அந்த அவமானத்தைப் போய் கிளப்புறியே.

கண் : இருவருக்கும் உங்களிடம் என்ன அபி மானமாம், தெரியுமா ?

கோவ: குலத்தளவேயாகும், குணம்.

கண் : இப்போது குலத்தை விட்டாச்சு. தவத்தில் இருக்கிறார்களாம்,

கோவ: இனி, தவம் ஒண்ணுதான் குறைச்சல்.

கண் : இருவரையும் நம்முடன் சேர்த்துக் கொண்டால் என்ன'ன்னு கேட்கிறேன்.

கோவ: இந்த சேர்க்கிற விசயத்தை விடு. இதனால் உனக்குத்தான் முதலில் கேடு.

கண் : இல்லை. இதனால் எனக்கு எந்த கேடும் இல்லை. நான் பாட்டில் ஒதுங்கி விடுவேன்.

கோவ: இப்படியா, விசயம்? இதனால் தான் விலகி விலகிப் போறியா? இது விருப்பக்குறைவா? இல்லை, வேறு உறவு எதாவது ...... வரவர புதிராகவே மாறி வருகிறாய், என்ன?

கண் : இருக்கிற உறவையே தட்டிக் கழிக்கப் பார்க்கிறேன். இனிமேலா புதியஉறவுக்கு ஆசைப்படப் போகிறேன்?

கோவ: நான் வெட்டுண்டு வீழ்ந்தபோது அடையாத வேதனையை, நாளாக அடைந்து வருகிறேன், கணணகி. என் நெஞ்சே வெடித்துவிடும் போல் இருக்குது.

கண் : இந்தசின்ன விசயத்துக்கு எல்லாம் வெடிக்க விடலாமா? இவ்வளவு பலவீனமாகவா

நெஞ்சை வைத்துக் கொள்வது ?

கோவ: இது உனக்கு சின்ன விசயமாகிவிட்டது. இருக்கட்டும். நீ மலராக இருந்தபோது அலட்சியப்படுத்தினேன். இப்போது முள்ளாக மாறி இருக்கிறாய் அனுபவிக்கிறேன்.

காட்சி 5

(பூங்கா)

(சுதமதியும், மணிமேகலையும் பேசிக் கொண்டு நிற்க, சித்ராபதி வருகிறாள்)

சித்ரா : இழுத்து வரச்சொன்னால் இங்கே வந்து கதை பேசிக் கொண்டு நிற்கிறியா, கழுதை. வாடி, சுதா.

சுதா : இது கதை இல்லை பாட்டி. கருத்து. இனி நானும் மணி கட்சி தான். இலட்சியத்தோடு வாழப்போறேன்.

சித்ரா : என்ன'டி, திமிரா பேசுற?

மணி : இந்த கிழட்டு எருமைக்கு என்ன தெரியும்?

சித்ரா: உன்னைக் கவனிக்கிறேன்'டி. ஊரில் கட்சியா பிரிக்கிற?

மணி : கவனிச்சு என்ன பண்ணுவியாம்?

சித்ரா : கம்பி எண்ண வைக்கிறேன், பார்.

மணி : கம்பி எண்ணினாலும், உனக்கு காசு எண்ண வரமாட்டேன், போ.

சித்ரா : ரவுடித்தனம் பண்றியாடி, ராசாவீட்டுப் பிள்ளை ஆசைப்படுது. மோசம் செய்யப் பார்க்கிறியே.

மணி : ஆசைப்பட்டால் நீ போவது தானே.

சித்ரா : நான் போய் முடிஞ்சுது. இனி உன் முறை. கண்ணு, வா. கைநிறைய வச்சு வாழலாம் வா. வாட்டமில்லாமல் வாழலாம்.

மணி : இப்படித்தான் அம்மாவுக்கும் ஆசை காட்டினாயா?

சித்ரா : இப்படியா உன் அம்மா பிச்சைசோறு சாப்பிட்டாள்? பழத்தில் சாப்பிட்டுவிட்டு பாலில் கழுவினாளே. பல்லக்கில் பவனி வந்தாளே. இந்த பாசி படிந்த உடையா? பளபளக்கும் பட்டு உடுத்தினாளே. நாளொரு புடவை, பொழுதொரு புடவை மாற்றினாளே. கழுத்து, கை, காது எங்கும் வைர நகை ஜொலிக்க, காலில் சலங்கை ஒலிக்க வாழ்ந்தாளே.

மணி : அது தான் அம்போன்'னு ஆய் கிடக்கிறாள்

சித்ரா : அகங்காரம். அவன் போனால் அடுத்தவன் இல்லியா? அணிவகுத்து வந்து நின்றானுகளே! அதைப் பார்க்காமல் போனவனையே பார்த்தால் ....!

மணி : இப்படி விற்று காசாக்க நடக்கிறியே. இங்கே உன்னை விற்று என்னமிச்சம்?

சித்ரா : இவ்வளவு அலங்காரப் பதுமையா, ஆடல ரசியா உங்கம்மாவை ஆளாக்கி வச்சேனே, போதாது? இப்படி கொளுத்துப் போயிடுவான்னு தெரியாதே!

மணி : அப்புறம் அம்மாவை விற்று...?

சித்ரா: அதில்தான் நீ வளர்ந்திருக்கிறியே, அசல் குற்றுவிளக்காட்டமா!

மணி : இனி என்னை விற்று என்ன பண்ண உத்தேசம்?

[இப்போது மகளிர் குழுவாக வந்து சேர்கின்றனர்]

சித்ரா : இது நமக்கு மட்டுமான உரிமை. நம்ம குலப்பெருமை. இப்படிக் கொட்டிக் கவிழ்க்கப் பார்க்கிறீங்கள'டி. குட்டிச்சுவராத்தான் போவீங்க

மணி : நாங்கள் என்றும் கோபுரமாத்தான் இருப்போம். நீயும், உன் குலமும்தான் குட்டிச் சுவராப் போகும்,

சுதா : இந்த கோபுரங்கள் சாய்வதில்லை

தீபா : நிமிர்ந்துதான் நிற்போம்.

மணி : இவங்க 'எய்ட்ஸ்' நோயை உற்பத்தி பண்றவங்க'டி.

சித்ரா : இப்போதே மேட்டுக்குடிக்குப் போறேன் இந்த ஆட்டத்துக்கு ஒரு முடிவு கட்டுறேன். இதோட எல்லார் சீட்டும் கிழியுதா இல்லையா, பார்க்கிறேன்.

மணி : இனி மேட்டுக்குடி பெண்களை வைத்து தொழில் நடத்தேன்.

சுதா : (பாடி, ஆடுகிறாள்) ''கவலை ஏதும் இல்லை ரசிக்கும் மேட்டுக்குடி. சேரிக்கும் சேர வேண்டும். அதற்கும் பாட்டுப்படி''.

சித்ரா : இப்படி பரம்பரை தொழிலை விட்டுக் கொடுத்தால் யாருக்கு நட்டம், பாருங்கடி? இதைவிட சுழுவான தொழில் வேறு என்ன இருக்குது. சுகத்துக்குசுகம். செலவுக்குச் சில்லறையும் கிடைக்குது.

மணி : இதில் கிடைக்கிறது சில்லறை இல்லை, கல்லறை - இதனால் முதலுக்கே மோசம்'னு சொல்றேன்.

சித்ரா : இது ஒண்ணுதான்'டி முதலே முடக்காத தொழில்.

மணி : இது உடலை முதலாய் வைத்துச் செய்கிற தொழில். பிணங்களுக்குத்தான், சரி.

சித்ரா : இந்த வாயிலும் வயிற்றிலும் மண் விழும்.

சுதா : எங்கள் மணியிடம் அமுதசுரபி இருக்குது.

தீபா : தட்டினால் திறக்கும்.

உமா : கேட்டால் கிடைக்கும்.

சுபா : வேண்டும் போது சுரக்கும்.

கலா : வேளா வேளைக்கு அமுதுபடைக்கும்.

சித்ரா : இப்படி வாழ வேண்டிய காலத்தை பாழாக்கிறீங்கள'டி.

சுதா : இப்படியா பேத்தியை விலைபேசுறது? இவள் ஒரு பாட்டி!

சித்ரா : இவளா எனக்குப் பேத்தி? இவள் குலத்தை அழிக்கவந்த கோடாரிக்காம்பு. இவளையும், இவள் அம்மா வையும் விட்டால், எனக்கு வேறுபகையே கிடையாதே.

தீபா : தொங்குறதைப் பாருங்கடி. (சிரிப்பு)

கலா : தோலில் சுருக்கத்தைப் பாருங்கடி (சிரிப்பு)

சுதா : வாயைத் திறந்தால் பல்விழுந்த சீப்பு மாதிரி (சிரிப்பு)

சித்ரா : இனி உங்களுக்கு சுருக்கமும் விழாது. தொங்கவும் செய்யாது. என்னிக்கும் தூக்கிக் கிட்டு தான் நிக்கும் த்து! பிழைக்கத் தெரியாத முண்டங்கள். (போகிறாள்)

மணி : எய்ட்ஸ் வியாபாரி போறாடி. எட்டி நில்லுங்க.

காட்சி – 6

(அலுவலகம்)

(தமிழ்நாடு சமூகநல வாரியத் தலைவராகத் தேர்வாகிறார், கண்ணகி. பல்வேறு சங்கங்கள் சார்பில் பாராட்டுகள் குவிகின்றன. கடைசியில் நிருபர்களுக்குப் பேட்டி அளிக்கிறார்.)

நிருபர்கள் : வணக்கம்'மா.

கண்ணகி : வணக்கம். வாங்க. உட்காருங்க.

நிருபர் : கற்பு'ன்னா என்ன'ம்மா?

கண்ணகி : கண்டவர்கள் சொன்னதில்லை. சொன்னவர்கள் கண்டதில்லை.

நிருபர் : விளக்கமாக சொல்லுங்களேன்.

கண்ணகி : இது ஒரு குழப்பம். விளக்க முடியாது.

நிருபர் : உங்களைக் கற்புக்கரசி என்கிறார்களே.

கண்ணகி : கண்ணீரைத் தவிர வாழ்வில் நான் கண்டது எதுவும் இல்லை. என் கதி உலகத்தில் எந்த பெண்ணுக்குமே வரக் கூடாது என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன்,

நிருபர் : நீங்கள் தெய்வங்களை வழிபடுகிறீர்களா?

கண்ணகி : நான் உண்மை ஒன்றையே வழிபட விரும்புகிறேன்.

நிருபர் : கணவனை வழிபட்டதாகச் சொல்லப் படுகிறதே.

கண்ணகி : அது கடந்தகால தவறு.

நிருபர் : காதல்'ன்னா என்ன?

கண் : கலியாணம்தான்'னு நான் இருந்தேன். என் கணவர், கரும்பே, தேனே, பாலே என்றார்...... என்ன என்றேன். காதல் என்றார். எவ்வளவு காலத்துக்குப் போச்சு என்பதுதான் தெரியுமே.

நிரு : காதல் தெய்வீகமானது என்கிறார்களே.

கண் : இது கதை. இன்னது என்று புரியாதவை களைத் தெய்வீகமானது என்று கூறிக் குழப்புவது இதில் ஒரு வகை.

நிரு : கற்பின் வலிமை பற்றி கதைகள் பல இருக்கிறதே!

கண் : கதைகள் தானே இருக்கிறது. கற்புக்கு வலிமை இருந்தால் கற்பழிப்புச் செய்திகள் நாள்தோறும் வந்து கொண்டிருக்குமா?

நிரு : கற்பின் வலிமையால் நீங்கள் புரிந்த சாதனை?

கண் : இன்னும் நான் எந்த சாதனையுமே புரிய வில்லை. எல்லாம் வேதனை தான்.

நிரு : இனியாவது சாதனை புரியும் எண்ணம் உண்டா?

கண் : உண்டு,

நிரு ; என்ன சாதனை புரிய உத்தேசம்?

கண் : பெண்களுக்கு முழு விடுதலை. பேதங் களற்ற, ஆதிக்கமற்ற சமுதாயம் அமையப் பாடுபடுவது.

நிரு : விபச்சாரத்தைப் பற்றி என்ன கருது கிறீர்கள்?

கண் : உள்ளத்தையும் உடலையும் தீய்க்கும் ஒரு தீமை.

நிரு : இதை ஒழிக்க என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்?

கண் : இதற்கு ஒத்த மனமும், ஒத்த உடலும் உடையவர்களுக்குள் திருமணம் நடைபெற வேண்டும். இனி மணவிலக்கு, மறுமண உரிமை தாராளமாக்கப்பட வேண்டும்.

நிரு : விபச்சாரத்தில் பெண்களை மட்டும்தானே பிடித்து வந்திருக்கிறார்கள்.

கண் : இதில் விற்பனையாளர்கள் பெண்கள்தான் என்று கருதி இருக்கலாம்.

நிரு : வாங்குகிறவர்கள் இல்லாவிட்டால் விற்பவர்கள் இருக்கமாட்டார்களே.

கண் : இப்போது இருபாலாரையும் பிடிக்க வழி பார்க்கிறார்களே! இருப்பினும் விபச்சாரத்தைக் குற்றமாக கருதி தண்டிப்பதை விட, இதன் அடிப்படை காரணத்தைக் கண்டுபிடித்து பரிகாரம் செய்வதே சரியாகும்.

நிரு : இதற்கு பலதார மணம் ஒரு பரிகாரமாகுமா?

கண் : இப்போதும் இருதாரங்கள் வைத்துக் கொள்ள வாய்ப்புகள் உள்ளனவே.

நிரு : இந்த விலைமாதர்களை, இருட்டறையில் காணும் இனம் தெரியாத பிணத்துக்கு ஒப்பிட்டு வள்ளுவர் குறள் எழுதி இருக்கிறாரே.

கண் : இதைப் பெறுகிறவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நிரு : வெளியே வந்தால் பெண்கள் கெட்டு விடுகிறார்கள் என்கிறார்களே.

கண் : வெறும் பேத்தல். வேண்டுமானால் உள்ளே தான் தவறு நடப்பதற்கு அதிக வாய்ப்பு கள் உள்ளன.

நிரு : வெளியே பெண்கள் வந்து விட்டால், வீடுகளில் சமையல் எப்படி நடக்கும்?

கண் : ஒருவரையே சமையலுக்கு நம்பி இருப்பது கொடுமை என்கிறேன்.

நிரு : இல்லாமல் இருவரும் சமையல்கட்டில் வேலை செய்ய வேண்டுமா?

கண் : ஒவ்வொரு வீட்டிலும் சமையல் கட்டு என்பது மகா கொடுமை.

நிரு : இல்லாமல் சாப்பாடு எப்படி நடக்கும்.

கண் : இதற்குத்தான் பொது சமையல் கூடம் ஏற்பட வேண்டும். இதில் அந்தப் பகுதி மக்கள் பங்காளர்களாக இருப்பார்கள்.

நிரு : இதில் பணியாளர்களாக பெண்களே இருப்பார்களா?

கண் : இந்த பெண், ஆண் என்ற பேச்சுக்கே இடமில்லை. இங்கு சமையல் கலையில் தேர்ச்சியும், ஆர்வமும் உள்ள யாரும் பணி புரியலாம்.

நிரு : உணவுப்பழக்கங்கள் மாறுபட்டு இருக்குமே.

கண் : இங்கு பொது விருந்துகள் நடக்க வில்லையா? இதில் ஊர் சேர்ந்து சாப்பிடுவது எவ்வளவு சுவையான அனுபவம்? இதுவே அன்றாட வாழ்விலும் என்றாகிவிட்டால் மகிழ்ச்சிக்குச்சொல்லவும் வேண்டுமோ?

நிரு : இதற்குத்தான் உணவுவிடுதிகள் உள்ளனவே.

கண் : இது விருந்து. அது வியாபாரம். இரண்டுக்கும் வித்தியாசம் இல்லையா?

நிரு : இதைப் பொதுமக்கள் சேர்ந்து நடத்தும் வியாபாரம் என்று சொல்லலாமா?

கண் ; விருந்து. அவ்வளவுதான்.

நிரு ; இது நமது மக்களுக்குப் பொருந்தி வருமா?

கண் ; இல்லாமல் வியவசாயத்துக்கும், வியாபாரத்துக்கும் மட்டும்தான் கூட்டுறவா? இதைவிட முக்கியமான விருந்துக்கு இருந்தால் கூடாதா?

நிரு : இதில் பிரச்சனைகள் ஏற்படுமே!

கண் : எதில்தான் பிரச்சனைகள் வராது. சமாளிக்க வேண்டியதுதான்.

நிரு : இந்த திட்டத்தை உங்கள் பெயரில் அறிமுகப்படுத்தவா?

கண் : இது மிகப்பழைய திட்டம். வேதகாலம் தொட்டே அமுலில் இருந்து வந்திருக்கிறது. இங்கு பெரியாரால், அறிமுகப்படுத்தப்பட்டது தான். இதை நடைமுறைப்படுத்தாமல் பெண் விடுதலை பேசுவதில் அர்த்தமில்லை.

நிரு : நல்வாழ்த்துக்கள் கூறுகிறோம்'மா.

கண் : நன்றி.

(விடை பெறுகின்றனர்)

காட்சி - 7

(பூங்கா)

(உதயகுமாரைக் கண்டு மணிமேகலை, உள்ளே பளிங்கு மாளிகையில் போய் ஒளிந்து கொள்கிறாள். உட்கார்ந்து இருந்தவள் சற்றே உறங்கிவிடுகிறாள் உறக்கத்தில் கனவு காண்கிறாள்)

மணி : உறவே.

உதய : உயிரே

மணி : மறவாயோ, இன்னும்?

உதய : மறப்பேனோ, என்றும்?

மணி : இழிகுலப் பெண் அல்லவா?

உதய : இனி என் கண் அல்லவா?

மணி : பழிகொண்டு வாழவோ?

உதய : பலியாகி மாளவோ, நான்?

மணி : இளமை நிலையாகுமா?

உதய ; இன்பம் பிழையாகுமா?

மணி : தவ வழி போற்றிடுவேன்.
தன் மானம் காத்திடுவேன்.

உதய ; அழகுக்கு என்ன தவமோ? -நான்
அருகிருக்க எது பயமோ?

மணி : அழகு மாயை அல்லவா- நாள்
ஆகத்தேயும் அல்லவா?

உதய : தேயும் போது தேயட்டுமே-நெஞ்சில்
தேனாய் இன்று பாயட்டுமே.

மணி : துன்பத்தை வெல்லும் வழி - இங்கு
துறவு ஒன்றே அறிவாய்.

உதய : உயிருக்கு உறவு வேண்டுமே!
உறவால் அமைதி தோன்றுமே!

மணி : தூய்மை இல்லா உறவால்,
துன்பம்தானே தோன்றும்!

(இப்போது போய்விடு, போய்விடு என்று மணி கூச்சல் போடுகிறாள். இதைக் கேட்டு சுதமதி ஓடோடி வருகிறாள். விழிக்கிறாள், மணி)

சுதா : என்ன'டி மணி; சத்தம்?

மணி : நான் தூங்கி விட்டேன், சுதா.

சுதா : அதற்குள் தூக்கம் வந்துவிட்டதா?

மணி : அப்படியாவது அவரை மறந்துவிடலாம்'னு தான்.

சுதா : அந்த அளவுக்கு என்ன வந்தது?

மணி : மாளிகைக் கதவைப் பூட்டினேன். மனக் கதவைப் பூட்ட முடியவில்லை, சுதா. கனவில் வந்துவிடுகிறார்'டி.

சுதா : இப்படி உன் மனமே, உனக்கு எதிராகத் திரும்பி நின்றால்......

மணி : இதைத்தான் மனதிடம் திரும்பத்திரும்பக் கேட்கிறேன்.

சுதா : மனசுக்கு என்ன ஏக்கமா?

மணி : இல்லை. குழப்பமா இருக்குது.

சுதா : இதெல்லாம் உனக்கு வரக்கூடாதே.

மணி : வரக்கூடாதது, வந்துவிடுகிறதே.

சுதா : உண்மையை உதயகுமாரிடம் சொல்லி விடலாமா?

மணி : இப்போது விரும்புகிறார். எப்போதும் விரும்புவாரா?

சுதா : விவரமாகக் கேட்டுவிடுவது.

மணி : இவர் சந்தர்ப்பத்துக்கு சம்மதிப்பார். இவரைச் சார்ந்தோர் அனுமதிப்பார்களா? குலம்தான் முன்னே நிற்கும். குணம் குப்பையில்தான். இதனால் குலம் ஒழியட்டும். இல்லாமல் நமக்கு திருநாளும் வேண்டாம். மணவாழ்வும் வேண்டாம்.

சுதா : இவர்களுக்கு உடல்தான் வேண்டும். உறவு தேவை இல்லை.

மணி : அதுவும் இளமை இருக்கும் வரைக்கும்தான் இந்த பளபளப்புக்குத்தான். அப்புறம் வீசி விட்டுப் போவார்கள்.

சுதா : கொஞ்சம் நாள் கோபுரத்தில், பிறகு குப்பையில்.

மணி : இந்த அடிமை வாழ்வு, எதுக்கு? அடைந்தால் உரிமை வாழ்வு. இல்லையேல் இருக்கவே இருக்கிறது, துறவு.

சுதா : இப்படி துறக்கவா, பிறந்தோம்'னு கேட்கிறாங்களே.

மணி : இல்லை சுதா. இந்த வெடகக் கேட்டைத்தான் துறந்தோம். வாழ்வை அல்ல. உறவுக்கு உறவு வேண்டும். இப்படி மனத்தால் பெறுவதைப் பணத்தால் வாங்கப் பார்ப்பதா? இந்த வாணிபத்தை வாழ்க்கை என்பதா? இறுதிவரை போராடுவோம். பெற்றால் வாழ்வு. போராடினால் வரலாறு. வாழ்வை விட வரலாறு மேல் இல்லையா?

சுதா : சரி. போராடுவோம்.

மணி : இப்போது நாம் கொஞ்சம் பேர் இருக்

கலாம். இன்னும் கொஞ்சம் நாளில் இந்த ஊரே நம் பின்னால் வரும், பார்

சுதா : இந்த ஊர் முழுவதும் நம் பக்சம் இழுத்து விட வேண்டும்.

மணி : இலட்சியப் போராட்டம்.

சுதா : இதுவும் ஒரு சந்தோசம் தான்.

மணி : இல்லாமல் சதைக்கு மட்டும்தானா, நாம்? இன்னும் சந்தை பொருளாக இருப்போமா? உயிரான சுதந்திரத்தை இழப்போமா? உறவுக்குக் கை கொடுப்போம். உரிமைக்குக் குரல் கொடுப்போம்.

காட்சி - 8

(கண்ணகி இல்லம்)

கண் : இங்கே வாங்களேன்.

கோவ: இப்பம் போக்கில் மட்டுமல்ல, பேச்சிலும், நழுவித்தான் நிற்கிறாய்.

கண் : என்ன அப்படி?

கோவ: இல்லை, நாதா, நாதா'ன்னு அடிக்கடி கூப்பிடுவாய். இப்போது ரொம்ப நாளாக அப்படி கூப்பிடுவதில்லையே.

கண் : இங்கே யார் நாதா'ன்னு கூப்பிடுவது? இனி நானும் அத்தான்'னு கூப்பிடட்டுமா?.

கோவ: இந்த அளவுக்கு வந்தாச்சா?

கண் : இது எவ்வளவு அழகான வார்த்தை. இங்கே இது தான், வழக்கத்தில் இருக்குது?

கோவ: இது சாதாரண பெண்களுக்குச் சரி.

கண் : இல்லாமல் நான் மட்டும் என்ன மேலான பெண்ணாம்?

கோவ: இங்கே நீ பத்தினிப் பெண்கள் வரிசையில் இடம் பெற்றவள். இதில் எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?

கண் : இதில் நீங்க பெருமைப்பட என்ன இருக்கிறது? இது போலிப் பெருமை?

கோவ: இங்கே பெண்டாட்டி பத்தினியாய் இருப்பதைவிட பெரிய பெருமை ஒருவனுக்கு என்ன இருக்க முடியும்?

கண் : இது ஒருவகை அத்துமீறல் என்கிறேன்.

கோவ: இதில் என்ன அத்துமீறல் இருக்குது?

கண் : இல்லாமல், தான் நல்லா நடந்து பெருமைப்பட்டால் சரி.

கோவ: இல்லை கண்ணகி. பெண்டாட்டி நல்லா நடக்கிறதில் புருசனுக்குத்தான் முதல் பெருமை.

கண் : இந்தமாதிரி பெருமை மனைவிக்கு வேண்டாம் என்கிறீர்களா?

கோவ: இது வழக்கம் இல்லியே. இதுவரைக்கும் கணவன் பெருமைதான் மனைவிக்கும் பெருமை. தனியா கிடையாது.

கண் : இதுவரைக்கும் தனியா கிடையாது. இனி வரலாம் இல்லையா? இப்பம் மச்சான்'னும் கூப்பிடுறாங்க!

கோவ: இது கொச்சையாய் தெரியுது, கண்ணகி.

கண் : இன்னும் 'மாமா'ன்னும் வேறு கூப்பிடுறாங்களாமே.

கோவ: இதைக் கேட்டால் குமட்டல் வருதே!

கண் : அப்புறம் எப்படித்தான் அழைக்கிறதாம்?

கோவ: வழக்கத்தை மாற்றாதே. நாதா'ன்னே கூப்பிடு.

கண் : இதைக் கேட்டால் சிரிக்கப்போறாங்க. இப்பம் உணவு, உடை, உறைவிடம் எதில் மாற்றம் இல்லை.

கோவ: இதற்காக, கணவன் மனைவி உறவிலுமா மாற்றம் வேண்டும்?

கண் : உரையில்தானே, மாற்றம்.

கோவ: உறவிலும் மாற்றம். உரையிலும் மாற்றம். உயிர்மட்டும் இருந்து என்ன மிச்சம்? உம் துன்பப்படுவதற்குத்தான்

கண் : இப்போது 'தோழர்'ன்னு கூப்பிடுவதுதான் சரி.

கோவ: இனி வந்து தோளிலும் கைபோடுவாய் போல் இருக்கிறதே.

கண் : அதுதான் உரிமை வாழ்வுக்கு அடையாள மாகும்.

கோவ: இந்த உரிமை எல்லாம் வெளியே வச்சுக்கோ. இதுவரை காலில் விழுந்து கிடந்தவள், இப்போது தோளில் கைபோட வருவதா? இனி நான் வாழ்ந்து என்ன பயன்? வீட்டின் அமைதியே போச்சே.

கண் : இப்பம்தான் ஆணும் பெண்ணும் சமம் என்கிறார்களே.

கோவ: இதற்காக கணவனும் மனைவியும் சமமாகி விடமுடியுமா?

கண் : இல்லாமல் வீட்டில் கணவன் முதலாளி, மனைவி தொழிலாளியா? இருவரும் பங் காளி என்பதுதான் சரி.

கோவ: இதெல்லாம் விபரீதத்திற்கு வழி வகுத்து விடும், கண்ணகி. இன்னும் நான் மாதவி யுடன் போனது போல், நீயும் வேறு ஒருவனுடன் போக முடியுமா? விளைவை எண்ணிப் பார்!

கண் : குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது.

கோவ: இருக்கட்டும். இதில் நான் குற்றப் பட்டவன் தான். இதே குற்றத்தை நீ செய்தால், நினைத்தாலே உடல் முழுதும் நடுங்குதே. நெஞ்சு படக் படக் என்று அடிக்குதே.

கண் : இது தேவை இல்லாத பதட்டம். இங்கே தவறாசு நடப்பதற்கு யாரும் உரிமை கேட்கவில்லை.

கோவ; இனி சம உரிமை'ன்னா எல்லாம் வந்து விடும் இல்லையா? இது கணவனுக்கு எவ் வளவு தலைகுனிவாகி விடும் தெரியுமா?

கண் ; இதில் போகிறவங்களுக்கு இல்லாத தலை குனிவு மற்றவங்களுக்கு எதுக்கு'ன்னு கேட்கிறேன்.

கோவ: இங்கு, நீ, என்னை மாதவிக்கு விட்டுக் கொடுத்தால் உத்தமி பட்டம். பத்தினி என்று பாராட்டு. இதைப்போல நான் உன்னை விட்டுக் கொடுத்தால் வெளியே தலைகாட்ட முடியுமா? எவ்வளவு வெட்கக் கேடு தெரியுமா?

கண் : இதில் நான்விட்டுக் கொடுத்தது என்ன? கட்டுப்போட, நீங்கள். கட்டுப்பட நான். இதோடு சட்டமும், சமூகமும், உங்கள் பக்கம் இருந்தது. இதனால் தாராளமாக நடந்து கொண்டேன். அவ்வளவுதான்.

கோவ: இன்று அந்த தாராளம் எங்கே'ன்னு கேட்கிறேன்.

கண் : இன்று சட்டம் மாறிவிட்டது. சமூகமும் மாறி வருகிறது.

கோவ: இந்தத் தைரியத்தில்தான், கணவனை மீறி நடக்கிறாயா?

கண் : இதில் மீறல் என்ன இருக்குது? இன்று சட்டத்தின் முன் அனைவரும் சமம். இனி நீங்கள்தான் மாறவேண்டும்.

கோவ: இல்லை கண்ணகி. இன்னமும் கணவனுக்கு அடங்கி நடப்பதுதான் மனைவிக்கு அழகு. இதில் கவுரவம் பார்ப்பது தவறு.

கண் : இந்த அடக்குமுறை, உங்கள் ஆணவத்தைத்தான் காட்டுகிறது.

கோவ: இது ஆண்களுக்கு இயற்கைதானே!

கண் : இது கணவன் மனைவிக்குள் சமத்துவத்தை பிரதிபலிக்கவில்லையே.

கோவ: இந்த சமத்துவம் சம்சார வாழ்க்கைக்கு ஒத்து வராது என்கிறேன்.

கண் : ஏன் வராது? இன்று தோழமைதான் உறவுகளில் எல்லாம் மேலாகப் போற்றப்படுகிறது.

கோவ: இந்த "தோழர்" என்ற வார்த்தையை மட்டும் சொல்லாதே. இது என் நெஞ்சை வாள் கொண்டு அறுப்பதுபோல் இருக்கிறது, ஆயிரம் தேளாக வந்து கொட்டுகிறது

கண் : இதைத்தான் ஆதிக்க நெஞ்சம் என்பது. இதில் நீதிக்கு இடம் இருக்காதுதான்.

கோவ: இது என்ன, உனக்குப் பித்தம் பிடித்து விட்டதா? இல்லை, சித்தம் கலங்கி நிற்கி றாயா?

கண் : இப்போது தான் புத்தி வந்திருக்கிறது. சித்தம் தெளிந்து இருக்கிறேன்.

கோவ: இது என்னமோ தெரியவில்லையே. இப் படி திடீரென்று, எதாவது ஆவிகளின் உபத்திரவமாக இருக்குமோ?

கண் : இது ஆவியல்ல, நீதியின் மேல் ஏற்பட்ட ஆர்வம்.

கோவ: இல்லை கண்ணகி, உன்னை பேய்தான் பிடித்து ஆட்டுகிறது. நான் போய் மந்திர வாதியை அழைத்து வருகிறேன்.

கண் : இது பேயும் அல்ல. நோயும் அல்ல. இதற்கு மந்திரவாதியும் மருத்துவரும் வேண்டியதில்லை. உங்கள் மனம் தான் மாற வேண்டும்.

கோவ: இப்போது நீ கற்றுக்கொடுக்க வேறு வந்து விட்டாய்! கற்றுக் கொடுப்பது ஆணினம். நீ கற்றுக்கொடுக்க நினைப்பது அறிவீனம்.

கண் : காலம் மாறிவிட்டது, கண்ணாளா?

கோவ: காலம் மாறினால் கோலமும் மாற வேண்டுமா?, அட, கடவுளே?

காட்சி - 9

(பூங்கா)

(பக்கத்தில் உதயகுமார் வருவதை பார்த்ததும், பளிங்கு மாளிகையில் போய் பதுங்கிய மணிமேகலை, காயசண்டிகை வேடத்தில் வெளியேறுகிறாள்)

உதய ; (வேடத்தை புரிந்து கொண்டு) பாவையே, உன்னைப் பார்க்கத்தான் ஓடோடி வந்தேன்.

மணி : நாவை அடக்கு. நீ ஏன் என்னைப் பார்க்க வேண்டும்?

உதய : தணியாத காம நெருப்பில் எரிகிறேன். தாமரைப் பொய்கையே.........

மணி : நெருங்காதே, எட்டி நில்.

உதய : ஆகா, வெண்ணிலா முகம்.

மணி : அதிலும் களங்கம் உள்ளது. அறிவாயா?

உதய : வெண் முத்துப் பற்கள்.

மணி : வீழ்ந்து விடும், ஒருநாள்.

உதய : கண்களோ காந்தள் மலர்கள்.

மணி : கருகுவதுதான், மலரின் இயற்கை.

உதய : கருமுகிலை ஒத்த கூந்தல்.

மணி : கடைசியில் வெண்முகிலாகி விடும், கவனி.

உதய : தளிர்மேனி.

மணி : தளிர்தானே முற்றிச் சருகாகிறது, போ' நீ

உதய : அச்சம் என்ன, அன்னக்கிளியே
ஆசையை விட்டால் மிச்சம் என்ன?

மணி : அர்த்தமற்ற புலம்பல்.

உதய : இன்பச்சுரங்கமே, இரங்காதா, உன்மனம்?

மணி : சொன்னால் விளங்காதா, உனக்கு?

[இந்நேரம், காயசண்டிகையின் கணவன் காஞ்சனன், தூரே வருகிறான். மணிமேகலையை உண்மையில் காயசண்டிகை என்று கருதி......]

காஞ்ச: காயசண்டிகை! காயசண்டிகை கேட்காமல் நிற்கிறாளே. காது செவிடாகி விட்டதா? வந்து கவனிக்கிறேன். (ஓடி பக்கத்தில் வருகிறான்) ....உம்! கண்டும் காணாதது போல் நிற்கிறாளே? காதல் மயக்கிவிட்டது? கணவன் கண்முன்னே கண்டவனுடன் உறவாடுகிறாயா? இந்தக் காஞ்சனன் உன்னை மீட்காமல் போகமாட்டான் (வாளை உருவி, உதயகுமாரை வெட்ட, அவன் விழுந்து துடிதுடித்து சாகிறான்)

மணி : ஆ, கொலை, கொலை.

(அதிர்ச்சியில் கத்திய மணிமேகலை வேடத்தை களைகிறாள். அவளை அடையாளம் தெரிந்ததும் அஞ்சி ஓடுகிறான், காஞ்சனன். அங்கே சுதமதி வருகிறாள்)

சுதா : (இரத்தவெள்ளத்தில் கிடக்கும் உதயகுமாரைப் பார்த்து) இந்தப் பாதகத்தைச் செய்தது யார்?

மணி : காஞ்சனன்.

சுதா : காஞ்சனனா, ஏன்?

மணி : நான் காயசண்டிகை வேடத்தில் உதயகுமாருடன் நின்றேன். இதைக்கண்ட காஞ்சனன், தப்புக் கணக்குப் போட்டு, இந்தக் கொலையைச் செய்தான்.

சுதா : என்ன அநியாயம், இது?

மணி : அப்புறம், என்னை அடையாளம் தெரிந்ததும், ஓடுகிறான்.

சுதா : இப்போது யாரையும் சும்மா விடமாட்டாங்களே. ஊரையே வந்து வளைப்பாங்களே.

(விழிகளில் நீர்வழிய, விம்மி விம்மி அழுகிறாள், மணி)

சுதா : இதற்கு நீ ஏன் அழுகிறாய்?

மணி : இத்தனைக்கும் நான் தானே காரணம். இந்த உலகில் நான் பிறந்திருக்கவே கூடாது, சுதா.

சுதா : இதில் நீ ஒரு தப்பும் செய்யவில்லையே.

மணி : இந்தப் பாவியைப் பின் தொடர்ந்ததால் தானே, உதயகுமாருக்கு இப்படி பரிதாப முடிவு வந்தது.

சுதா : இல்லாவிட்டால், இன்னொருத்தியைப் பின் தொடர்ந்து போய் செத்திருப்பார். இவர்களுக்கு காதலின் அரிச்சுவடியே தெரியவில்லை. கனிந்து வருவதுதானே காதல்? இப்படி ஏன் துரத்திக்கொண்டு திரிகிறார்கள்? இதனால்தான் பரிதாபமுடிவு.

மணி : இது முற்பிறப்பில் ஏற்பட்ட உறவு, சுதா.

சுதா : எப்பிறப்பாய் இருந்தால் என்ன? எல்லாம் முடிஞ்சுதே!

மணி : அவரிடம் அனுதாபம் மேலிடுகிறது, சுதா. ஆறுதல் இன்றி தவிக்கிறேன்.

சுதா : இனி தவித்து என்ன பயன்? நடந்தது நடந்தது தான்.

மணி : இது சரி, சுதா. இப்படி தனியொருவர் சாவுக்கு நாம் வருந்தக் கூடாதுதான். இறப்பு பொதுவானது

சுதா : சுற்றி சுற்றி வந்தாரே!

மணி : இங்கு சாவு ஒன்றுதான் சுதா நிச்சயமானது. இறப்பு என்பது பிறப்பிலே நிர்ணயிக்கப்பட்டுவிடுகிறது. இவர் என்ன,எல்லோருமே, இனி நாமும் சாகப்போகிறவர்களே இடையில் சொந்தம் என்கிறோம். சுகம் என்கிறோம். பந்தம் என்கிறோம். பாசம் என்கிறோம். இதெல்லாம் கொஞ்சம் நாளைக்குத்தான் இல்லையா?

சுதா : எனக்கு பயமா இருக்குது, மணி.

மணி : ஏன், பயப்படுகிறாய்?

சுதா : நம்மீது பழிசுமத்துவார்களே.

மணி : என் மீது பழிசுமத்தட்டும், சுதா. எந்த தண்டனையும் ஏற்க நான் தயார்.

சுதா : இதில் உன்னிடம் எந்த தப்பு இல்லையே

மணி : இருந்தாலும் தப்பி ஓட விரும்பவில்லை. இதற்கு என்மனம் ஒப்பவில்லை.

காட்சி 10

(கண்ணகி இல்லம்)

(இரவு நேரம் கழிந்து வந்து, கதவைத் தட்டுகிறான், கோவலன்)

கோவ: கண்ணகி! கண்ணகி! (தொடர்ந்து தட்டுகிறான்)

கண் : (சற்று மௌனத்திற்குப்பின்) யார், அது?

கோவ: நான் தான். கதவைத்திற.

கண் : (கதவைத் திறந்து கொண்டே) என்ன இவ்வளவு நேரம்? எங்கே போனீங்க?

கோவ: இது யாரிடம் யார் கேட்கிறது?

கண் : இரவு பிந்தி வருகிற கணவனிடம் மனைவி கேட்கிறேன். ஏன் கேட்க கூடாதா?

கோவ: இப்படி எல்லாம் முன்பு கேட்க மாட்டியே

கண் : இந்த முன்பு, பின்பு என்பதை விடுங்க. இனியாவது நல்லது, கெட்டது பார்த்து நடை'ங்க.

கோவ: இதே நான் வாரக்கணக்கில், மாதக் கணக்கில், ஏன்? வருடக் கணக்கில் வராது இருந்தபோது வழிமேல் விழிவைத்துப் பார்த்து இருப்பாயே. கதவண்டையில் காத்து இருப்பாயே. இன்று சிலமணி நேரம் பிந்தி வந்ததற்கே, கனல் கக்குகிறாய். அனலைப்பொழிகிறாய்

கண் : இன்னும் உங்கள் மனம் போல் விட்டுக் கொடுக்க வேண்டுமா? நான் எவ்வளவு பதட்டத்துடன் இருந்தேன், தெரியுமா?

கோவ: இப்பவும் வேறொருத்தியுடன் போய் இருப் பேன்'னா? இனி அந்த மாதிரி எதுவும் நடக்காது, கண்ணகி. என்னை நம்பு.

கண் : இன்னமும் எதாவது பொய் வழக்கில் மாட்டிக் கொள்ளக் கூடாது'ன்னுதான். இப்பம் நாடு அப்படி கெட்டுக் கிடக்குது. யாராவது தப்பு செய்துவிட்டு, உங்கள் தலையில் வைத்து கட்டிவிட்டால்......!

கோவ: இப்படி ஒருமுறை நடந்தால், எப்பவும் நடந்துவிடுமா?

கண் : இப்பம்தான் உங்களுக்கு வெளியே வேலை இல்லையே. இரவு பன்னிரண்டு மணி வரை எங்கே போனீங்க? இனிமேல் பிந்தி வந்தால் கதவு திறக்க மாட்டேன்; ஆமா.

கோவ: இந்தக் கட்டுப்பாடு எதுக்கு கண்ணகி? என்னைக் காப்பாற்றவா? இனி எதற்காக என்னைக் காப்பாற்ற வேண்டும்?

கண் : இது உங்களை மட்டுமல்ல, ஊரையும் சேர்த்துக் காப்பாற்றத்தான். இன்னும் விட்டுக் கொண்டிருந்தால் முன்பு மதுரை எரிந்தது போல், இனி மெட்ராசும் எரியவா?

கோவ: இப்பம்தான் நீ என்னை கிட்டே நெருங்க விடுறதில்லை எட்டிஎட்டிப் போய் விடு கிறாய். இதனால் உன் கவனத்தைத் திருப்பிறதுக்காகத்தான்.

கண் : இதில் என் கவனத்தைத் திருப்புறதில் எந்த பயனும் இல்லை. இன்னும் கொஞ்ச நாளையில் மாதவி வந்துவிடுவாள். நீங்க பட்டகடன் பாக்கி இருக்குது, முடியுங்க.

கோவ: திரும்பவும் மாதவி எதுக்கு? நான்தான் திருந்தி வந்தாச்சே.

கண் : திருந்தி வரல்ல. திரிந்துதான் வந்தீங்க. மாதவியைத் தப்புக்கணக்குப் போட்டுப் பிரிந்து வந்தீங்க.

கோவ: இந்த மாதவி தானே உன்னிடமிருந்து என்னைப் பிரித்தவள். அவளுக்கு பரிந்து பேசுறியே!

கண் : என்னிடமிருந்து உங்களைப் பிரித்த மாதவியை அல்ல, என்னிடம் உங்களை ஒப்படைத்து விட்டு, தனக்கு உரியது துறவு தான் என்று தவக்கோலம் பூண் டாளே, ஏன்? தன்னந்தனியாக நின்று சமுதாய அநீதிக்கு எதிராக, சாதிக் கொடுமைக்கு எதிராக போர்க்கொடி தூக்கி

னாளே, அந்த மாதவியை நான் மதிக்கிறேன்.

கோவ: இனி நம் வாழ்வில் வசந்தமே வீசாதா, கண்ணகி?

கண் : இல்லாவிட்டால் எப்போது வசந்தம் வீசியதாம்? கசந்து வீசியதைத்தான் நான் கண்டேன்.

கோவ: இதை அப்போது காட்டிக் கொள்ளவில்லையே.

கண் : அடக்கமா இருந்தேன். அவ்வளவுதான்.

கோவ: இதைப்போல் அடக்கமான கண்ணகியுடன் நான் வாழ விரும்புகிறேன்.

கண் : இனி அந்த வாய்ப்பு கிடைக்காதுதான்.

கோவ: இல்லாமல் என் வாழ்வு இருள்மயம் தானா?

கண் : இன்னும் உங்கள் வாழ்வைப் பொருள் உள்ளதாக மாற்ற வழி இருக்கிறது. ஆம்; மாதவிக்கு மறுவாழ்வு அளிப்பதன் மூலம். இதைப்போல் மணிமேகலையின் வாழ்வுக்கு பொறுப்பு ஏற்பதின் மூலம், உங்களைப் பொருளுள்ள மனிதராக்கலாம்.

கோவ: இவ்வளவுக்கு என் மனம் நோகப் பொறுக்காதவள், இப்போது நொறுக்கத் துணிந்து விட்டாள்.

கண் : இல்லாமல் என் மனசுக்கு நிம்மதி வேண்டாமா? இவைகள் நிறைவேறினால் தான் நானும் நிம்மதியோடு கண்ணைமூட முடியும்.

காட்சி - 11

(மாதவிக்குடில்)

(உதயகுமார் கொலை காரணமாக, சிறைபட்ட மணி மேகலை விடுவிக்கப்படுகிறாள். ஊரே திரண்டு சென்று வரவேற்று அடிகளாரிடம் அழைத்துச் செல்லப் படுகிறாள். ஊர்வலம் கடந்து செல்வதை பார்த்துக் கொண்டு மாதவி வெளியே நிற்கிறாள். உதவி யாளர்களுடன், கண்ணகி வேனில் வந்து இறங்குகிறாள்.)

மாதவி: வாங்கம்மா (கூப்பியகரங்களுடன் வணக்கம் கூறுகிறாள்.)

கண் : அம்மாவா? (அருகில் சென்று கைகளைப் பிடித்து தோளில் தட்டிக் கொடுத்து) அக்கா'ன்னு சொல்லு.

மாதவி: ஆண்டவனுக்கே சமமானவங்க

கண் : ஆண்டவன் அடிமை எல்லாம் மாண் டோருக்குள் இருக்கட்டும். மாந்தருக்குள் வேண்டாம்.

மாதவி: நல்லா இருக்கீங்களா'க்கா?

கண் : என்ன, என்னை மட்டும் கேட்கிறாய்? ஏன், அவரை மறந்துட்டியா?

மாதவி: எப்படியக்கா மறக்க முடியும்? ஏழு ஆண்டு களாக அவருடன் வாழ்ந்த வாழ்வை நினைத்துத்தான், அந்த நினைவில் தான் இன்றும் இருந்து வருகிறேன்.

கண் : என்னமோ, தவத்தில் இருப்பதாகச் சொன்னார்கள்.

மாதவி: எல்லாம் தப்பிக்கிறதுக்குத்தான்.

கண் : ஏன், அவருடன் சேர்ந்துவாழ முயற்சிக்கக் கூடாது?

மாதவி: வேண்டாம்'கா. நான் அந்த விருப்பத்தை எல்லாம் விட்டுவிட்டேன்.

கண் : என்னவாம்?

மாதவி: நான் உங்களுக்கு துரோகம் செய்து விட்டேன்.

கண் : இப்போது தான் புரிந்ததா?

மாதவி: ஆமாம், பிரிவு என்பதும் அனுபவித்தால் தான், தெரியுது.

கண் : இப்போது உனக்குப் பிரிவுத் துன்பம் இல்லையா?

மாதவி: இதுதான் எங்களுக்கு விதியாச்சே.

கண் : இந்த விதிப்படி ஒன்றுபோனால், ஒன்று பார்க்கலாமே.

மாதவி: இதற்கு மனம் ஒத்துக்கொள்ள வேண்டாமா?

கண் : இருந்தால் அவரிடம் போய் ஒட்டிக் கொள்ள வேண்டியதுதானே.

மாதவி: ஒட்டுமண்ணு சுவராகுமா'க்கா? ஒதுங்கி விடுவது மேல் இல்லையா?

கண் : சரி. சரி. குழந்தை எங்கே?

மாதவி; அதோ வருகிறாளே.

(அமுதசுரபி கைகளில் ஏந்த, ஐந்து பெண்கள் சூழ மணிமேகலை வருகிறாள்)

மணி : அம்மா......ஆ! (ஆச்சரியத்துடன் கண்ணகி அருகில் செல்கிறாள்)

கண் : வாம்மா (வாரி அணைத்துக் கொள்கிறார், மணியை) மறந்துட்டியா?

மணி : உங்களை மறக்க முடியுமா?

கண் : இப்படி பாத்திரமும் கையுமாய் அலைகிறாய்?

மணி : இது பாத்திரம் இல்லை'ம்மா, அமுதசுரபி. சொல்லுங்கடி.

சுதா : இது அதிசய பாத்திரம். கேட்டாலே சுரக்கும்.

கண் : சும்மா கேட்டால் சுரக்குமா? போட்டால் தான் சுரக்கும்.

மணி : நம்பிக்கை வேண்டும். ஏன்'டி நிக்கிறீங்க.

உமா : இது ஆண்டவனே நேரில் வந்து கொடுத்தது.

தீபா : எங்கள் மணி தெய்வப் பிறவியாக்கும்.

கண் : நல்ல தயாரித்திருக்கிறியே! நான்குபேர் கிடைத்தால், எந்த நாடகத்தையும் அரங்கேற்றி விடலாம். இல்லையா?

சுதா : எங்கள் மணிக்கு எல்லா வேடமும் போடத் தெரியும்.

கண் : இது தவறு இல்லையா?

மணி : தற்காப்புக்காக கொலை கூட பண்ணலாம். தவறு பண்ணக்கூடாதா?

கண் : தற்செயலாக நடந்துவிட்டால் சரி, தவறே வாழ்க்கையாகி விடக்கூடாது அல்லவா?

மணி : பெருமைக்காகவா செய்கிறோம்? பெரிய தப்பில் இருந்து தப்பிக்க, சிறியதப்பு.

கண் : இனிமேல் இந்த தவறுகளுக்கு அவசியமே இல்லை.

மணி : இருந்தால் சரிதான்.

கண் : இப்பம் நம்ம அனாதைகள் இல்லை'ம்மா. நமக்கு'ன்னு அரசாங்கம் இருக்குது. சட்ட திட்டங்கள் இருக்குது. பசித்தவங்களுக்கு உணவு. படித்தவங்களுக்கு வேலை வாய்ப்பு. இன்னும் எல்லோருக்கும் பாது காப்பு.

சுதா : படிக்காதவங்களுக்கு

கண் : படிப்பு.

மணி : சட்டம் ஏழைக்கு எட்டாது என்கிறார்களே.

கண் : இப்போது ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி. இன்னும் பெண்களுக்கு சம உரிமை எல்லாம் வந்துவிட்டது.

மணி : இன்னும் குலம் இருக்குதே!

கண் : இனி குணம்தான் இருக்கமுடியும். குலம் இருக்க முடியாது.

சுதா : பிறகு என்ன, கும்மியடித்துப் பாடுங்கடி- ஊர் குலுங்கிடசென்று கூறுங்கடி.

கண் : அதெல்லாம் அப்புறம்.

மணி : அம்மாவுக்கு, உங்களையும் அப்பாவையும் பற்றித்தான் எப்போதும் நினைப்பு.

கண் : அம்மாவையும் அப்பாவையும் சேர்த்து வைத்தால் போச்சு.

மாதவி: அவள் சும்மா சொல்றா'க்கா. அந்த ஆசையோடு நான் நினைக்கிறதில்லை.

கண் : ஆசைக்கு வயசேது?

சுதா : (பாடுகிறாள்) அய்ம்பதிலும் ஆசைவரும். ஆசையுடன் பாசம் வரும். இதில்-அந்த ரங்கம் கிடையாதம்மா

கண் : பாடுறதைக் கேளுங்க.

மணி : நான் தவ வாழ்க்கை மேற்கொண்டுள் ளேன்'மா.

கண் : இதுவும் நாடகம் தானா?

மணி : இல்லை'ம்மா. உலக துன்பம் அணுகாமல் இருக்க.

சுதா : இவளை உதயகுமார் ஆசைபட்டான்'மா

கண் : அப்படியா?

சுதா : அவனை காஞ்சனன் கொன்னுட்டான். அழுதாம்மா, மணி.

மணி : அதுக்காக என்னை சிறையில் அடைச்சாங்க

கண் : அப்புறம்?

மணி : அரசியார், ஆள்வைத்து கொடுமைப் படுத்தப் பார்த்தாங்க. அத்தனை பேரும் நம்மாளா மாறி உதவி செய்தாங்க. அத னால் எதுவும் பலிக்கவில்லை.

கண் : அப்புறம் என்ன ஆச்சு?

மணி : என்னிடம் அற்புத சக்தி இருக்குது'ன்னு பயந்து விடுதலை பண்ணிட்டாங்க.

சுதா : நாங்களும் சேர்ந்து போராடினோம்'மா.

கண் : எங்கும் அற்புத அதிசயங்களுக்குத்தான் பணிகிறாங்க. இல்லையா?

சுதா : இவளும் உதயகுமாரை ஆசைப்பட்டா'ம்மா கற்புகூட அசைந்தது'ன்னு சொன்னாள்.

மணி : இது முற்பிறப்பில் ஏற்பட்ட உறவாம்மா...!

கண் : அது எப்புடி, முற்பிறப்பு உறவு வந்து கற்பை அசைக்குதாக்கும்?

மணி : அப்படி அடிகளார்தான் சொன்னார்'ம்மா.

கண் : இது எந்த காலத்து அடிகளார்? இந்த காலத்தில் காந்தியடிகளின் வாலிப சன்னியாசமே கத்தி முனையில் நடப்பதுபோல் இருந்ததாம். ஆம், தட்டுத்தடுமாறியதாம். இளமையில் சன்னியாசம் மிகக் கொடியதம்மா. இந்த மாதிரி அசைவுகள் எல்லாம் இருக்கும். இதற்கு பயந்துவிடக் கூடாது. இன்னும் முற்பிறப்பு அது இது'ன்னு சாக்கு போக்குச் சொல்வது நம்மைப் பலவீனப்படுத்தி விடும்.

மணி : இப்படி சொன்னால் சுலபமாய் தப்பிக்க முடியுது இல்லையா?

கண் : இப்படி தப்பிச்சுகிட்டே இருந்தால் போதாது. இது மனசை அழித்துவிடும். இங்கு தைரியத்தை இழந்து ஒரு வாழ்க்கை இல்லை'ம்மா. தைரியம் தான், உலகில் நாம் வழ்வதற்குரிய பாஸ்போர்ட். தவற விட்டால் போச்சு.

மணி : அம்மா பக்கத்தில் இருந்தால் தைரியம்தான்

கண் : இனி நான் பக்கத்தில், இருப்பதுபோல் தான்.

(இப்போது சித்ராபதி வருகிறாள்)

சித்ரா : வந்துட்டியம்மா (இருகைகளையும் பிடித்து முத்தமிட்டு, கன்னங்களைத் தொட்டு, ஒததுகிறாள்)

மணி : இவங்க, நம்மையெல்லாம். நல்லா ஏசு வாங்க'ம்மா.

சித்ரா : இப்படி அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டீங்களே'ன்னு பேசுவேன். இப்பம்தான் வந்துட்டீங்களே.

மணி : நரிவேடம் போடுவாங்க, நம்பாதீங்க.

சித்ரா : நல்லா கோள் மூட்டிவிடுகிறாளே, மணி நான் மடியில் போட்டு வளர்த்தேன் தோளில் தூக்கிச் சுமந்தேன். நன்றியே இல்லாமல் போயிட்டாம்மா,

கண் : ஊரார் ஏசினால் தாயிடம் வருவார்கள். தாயே ஏசினால் யாரிடம் போவார்கள்?

சித்ரா: இப்படி வருவீங்க'ன்னு தெரிஞ்சா பேசுவேனா? இனி பேசமாட்டேன'மா. நான் வரேன்'மா.

(இருகைகளையும் பிடித்து முத்தமிட்டு கன்னத்தில் ஒத்திவிட்டுப் போகிறாள்)

காட்சி 12

(சிலம்பு செல்வர் இல்லம்)

(வெளியே கோவலன் தட்ட, வீட்டில் இருந்த சிலம்பு செல்வர் எட்டிப்பார்க்கிறார்)

கோவ: அய்யா வாங்க, வணக்கம்.

சி.செ : (ஆச்சரியத்துடன்) யார்? (கதவைத்திறந்து வரவேற்கிறார்)

கோவ: என்னைத் தெரியவில்லையா? நான்தான் கோவலன். உங்கள் செல்லப்பிள்ளை, (உட்காருகிறான்)

சி.செ : நல்லா இருக்குது. நானறிய, நாடறிய ஒரு கோவலன் தான் உண்டு. நாடுவிட்டு நாடு சென்ற அவனும் பாண்டியன் வாளுக்கு பலியாகி விட்டானே!

கோவ: பலியானதைப் பார்த்தீங்களா?

சி.செ : படித்ததுதான். பார்க்கவில்லை.

கோவ: இப்போது பாருங்கள். இதோ பாண்டியனால் வெட்டப்பட்ட என் கைகள். எப்படி ஒட்டப்பட்டிருக்கிறது, பாருங்கள்.

சி.செ : இது அரங்கத்திற்கு வராத விசயமாச்சே.

கோவ: அரங்கத்திற்கு வராதது எல்லாம் உண்மை அல்ல என்றாகி விடுமா?

சி.செ : ஆகாதுதான். அப்போது கண்ணகி?

கோவ: அவளும் என்னுடன் இருக்கிறாள்.

சி. செ: இல்லையே. கண்ணகி விமானம் ஏறிச் சென்றதாகத்தானே. கதை

கோவ: அது கதை. ஆனால் உண்மை வேறு.

சி. செ: இப்போது சிலப்பதிகாரத்தையே மாற்றி விடுவீங்க போலிருக்கிறதே.

கோவ: எல்லாம்தான் மாறுது. ஏன், சிலப்பதிகாரம் மட்டும் மாறக்கூடாதா?

சி. செ: எப்படியும் கண்ணகியை மனைவியாகக் கொண்ட நீங்கள் கொடுத்து வைத்தவங்க.

கோவ: என்காட்டில் மழை பெய்யுது'ன்னுதான் எல்லோரும் கணக்குப் போடுகிறார்கள். என் வீட்டின் வறட்சியை யார் காண்கிறார்கள்?

கி. செ: என்ன அப்படி?

கோவ: வர வர பெண்களுக்கு பத்தினித்தன்மை குறைந்துகொண்டே வருகிறது.

சி. செ: இதற்கு உங்களைப் போன்றவர்கள்தான் காரணம் என்று குற்றம் சாட்டுகிறேன்.

கோவ: எதைக் குற்றம் என்கிறீர்கள்?

சி செ: உங்களால் ஒரு பத்தினிக்கு வாழ்வு அளிக்க முடியவில்லையே.

கோவ: அவள் பத்தினி என்கிறது ஆரம்பத்தில் எப்படி தெரியும்?

சி. செ: இருப்பினும் கட்டியவளைத் தவிக்கவிட்டு, கண்டவளுடன் போய் கிடந்தது தப்பு இல்லையா?

கோவ: இது கணவன்மார்களுக்கு வழக்கம்தானே.

சி. செ: இருந்தாலும் போனேன் வந்தேன்'னு வேண்டாமா? இப்படியா ஆண்டுக் கணக்கில் போய் மயங்கிக் கிடப்பது.

கோவ: இதற்கு கலையுணர்வுதான் காரணம்'ன்னு நீங்கள் சொல்லி இருக்கிறீர்களே!

சி. செ: அது ஒரு இதுக்குச் சொன்னேன். அதுவும் நீங்கள் இறந்துவிட்டதாகக் கருதிச் சொன்னேன்

கோவ: இறந்தால் ஒரு மரியாதை. இருந்தால் ஒரு மரியாதையா?

சி.செ : இறந்தவர்கள் தவறுகளைக் கண்டு கொள்வது பண்பாடு இல்லை.

கோவ: இங்கே இருக்கிறதைவிட இறக்கிறதுதான் மேல்'ன்னு சொல்றீங்களா?

சி.செ : இது விரக்தியில் கேட்பதுபோல் தெரியுது.

கோவ: இப்போது நீங்களும் கை விட்டால், இனி என் கலையுணர்வுக்கு சாட்சி யார்?

சி.செ : இதற்கு என்ன அவசியம்?

கோவ: இங்கே சிலகாலமாக கலைஞர்கள் ஆட்சி நடக்கிறதே! இந்த சிலப்பதிகாரக் கலை

ஞனுக்குஒருசிறப்புசெய்யக்கூடாதா?இதற்கு உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, சிபார்சு பண்ணலாம் இல்லையா?

சி.செ : சாதனை புரிந்தவர்களுக்குத்தானே, சிறப்பு செய்வார்கள்.

கோவ: கண்ணகி என்ன சாதனை புரிந்தாள்?

சி.செ : கணவன், கள்வன் அல்ல என்று சாதித்த வள், கண்ணகி.

கோவ: அந்த கணவனே நான்தானே அய்யா. அவளுக்கு காட்டுகிறதில் ஆயிரத்தில் ஒரு மரியாதை எனக்கு உண்டா? அதனால் அல்லவா, அவள் கர்வம் கொண்டு நடக்கிறாள்.

சி.செ : என்ன? கண்ணகிக்குமா கர்வம் பிடித்து விட்டது.

கோவ: இதுவரை பதிசேவை செய்தது எல்லாம் பாழ் என்கிறாள். இனி பெண் விடுதலைக்கு பாடுபட போகிறாளாம்.

சி.செ : பாவம், பட்டபாட்டிற்கு பரிகாரம் தேடிப் புறப்பட்டிருக்கிறாள், போலும்?

கோவ: இதிலுள்ள அபாயத்தை நீங்கள் உணர வில்லை'ன்னு நினைக்கிறேன். மொத்தத் தில் நமக்கு ஏற்பட்ட அவமானம்.

சி.செ : இன்னும் ஆண் பூனையாக, பெண் எலி யாக தொடரவேண்டுமா?

கோவ: அதனதன் இயற்கைக்கு விட வேண்டியது தானே.

சி.செ : இயற்கையில் தூய உறவுக்கு சமத்துவம் தான், அடிப்படை. இதுதான் சம்சார

வாழ்க்கைக்கு பாதுகாப்பானது. சமாதானத்துக்கும் வழிவகுப்பது.

கோவ: இது நமக்கு பெரிய பாதிப்பு என்கிறேன். மேல் போக்காகப் பார்க்காதீங்க. ஆழமாப் பாருங்க.

சி.செ : இப்படி ஆழமாகத் தோண்டினால் உறவு நிற்காது'ப்பா. சும்மாவா குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்கிறார்கள்.

கோவ: இருந்தால் என்ன மிச்சம்?

சி.செ : பெண் என்றால் பெண்டாட்டி மட்டுமல்ல, பெற்றதாய், உடன்பிறப்பு, மகள், பேத்தி எல்லாரும் பெண்தானே.

கோவ: புருஷன் பெண்டாட்டி விவகாரம்தானே, பெரிசு. மலை உச்சியில் ஏற்றி வைத்து விட்டு, புரட்டிகீழே தள்ளிவிடுவதா?

சி.செ : இதுக்குத்தான் தரையில் இறங்கிவிடச் சொல்கிறேன். இந்த ஏற்றத்தாழ்வுகள் எப்போதுமே ஆபத்துதான். ஒத்த நிலமைதான் வேண்டும்.

கோவ: இந்த ஒத்த நிலமை கணவன் மனைவி உறவுக்கு ஒத்துவராது.

சி.செ: இருந்தால் 'ரத்து' வரும்.

கோவ: என்னது?

சி.செ : அதாவது உறவு வாபஸ் ஆகும்,

கோவ: இப்படி எல்லாம் முன்பு இல்லையே

சி.செ : இப்போது வந்துவிட்டது

கோவ: இருந்தால் பெண்களை வழிக்குக் கொண்டுவர முடியாது

சி.செ : இதனால்தான் ராசியாகிவிடச் சொல்கிறேன்

கோவ : இனி ஆண்களள் சாக வேண்டியதுதான்

சி.கெ : என்ன பயமுறுத்துகிறாயா?

கோவ : இல்லை நிஜமாத்தான் சொல்றேன்
(புறப்படுகிறான்)

காட்சி 13

(இந்திரா, நகர் டாக்டர் முத்துலட்சுமி மகளிர் மன்றம் புதியகட்டிடத் திறப்புவிழாவும், இலவச தையல் எந்திரம் வழங்கும் விழாவும்)

சாந்தா: (வரவேற்புரை)
இந்தப் பகுதியை முதலில் பார்வையிட்ட போது நாங்கள் மிகவும் பரிதாபப்பட்டுப் போனோம். இங்கு உள்ளவர்களுக்கு சட்டமும் தெரியவில்லை; எந்த அரசுத் திட்டமும் எட்டிப்பார்த்ததுஇல்லை. இதற்காக ஊரில் யாரும் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை, சமுதாயம் பல துறைகளிலும் முன்னேறிப்போய் கொண்டிருக்கிற சமயத்தில், இப்படி சில இடங்களில் தேக்கங்கள் ஏற்பட்டு வீடுகிறது. இத்தகைய குட்டைகளைக் கண்டுபிடித்து சமுதாய நீரோட்டத்தில் சேர்ப்பது நம் அவசரப்பணியாகும். இந்த வகையில், இதற்கு என்றே தன்னை முழுதும் அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றி வரும் கண்ணகி அம்மையார் விழாவுக்குத் தலைமை ஏற்க இசைந்தது மகிழ்ச்சிக்குரிய விசயமாகும், இதைபோல் பிரபல மருத்துவரும், மகளிர் இயக்கத்தின் ஒரு புரவலருமாக விளங்கிவரும் டாக்டர் இந்திரா அவர்கள் புதிய கட்டிடத்தை திறந்து வைக்க இசைந்தது இரட்டிப்பு

மகிழ்ச்சி தருவதாகும். இவர்களையும் இன்னும் விழாவைச் சிறப்பிக்க வருகை தந்துள்ள அனைவரையும், இருகரம் நீட்டி வரவேற்கிறேன். வணக்கம்.

கண்ணகி: (தலைமையுரை)

இயற்கையில் எல்லோரும் மனிதராகத் தான் பிறக்கிறோம். இடையில் ஏற்பட்டுவிட்ட குழப்பங்கள்தான், குலம் மற்றும் பிரிவினைகள். இப்போது "ஒன்றே குலம்" என்பது ஒப்புக்கொள்ளப் பட்டுவிட்டது. இதற்கு ஒத்துவராத பகுதிகள் இன்னும் இருப்பது கவலை அளிப்பதாகும். இதில் தெய்வங்களின் பெயர்களை சம்பந்தப்படுத்துவது பெரிய மோசடியாகும். இதனை அரசுத்துறையினரும், தொண்டு நிறுவனங்களும் நன்கு புரிந்துகொண்டு செயல்பட வேண்டும். இந்த சட்டதிட்டங்களின் பயன், பங்கு ஒவ்வொரு குடிமகனையும் சரியாகப்போய் எட்டும் போதுதான், நம் பணி முழுமை பெறமுடியும்.

இந்தப் பகுதியினரின் தொழில் எவ்வளவு இழிவு தரக்கூடியது. இது யாருக்கோ நேர்ந்து விட்ட பழி என்று நாம் இருக்க முடியாது, இதனால் சமுதாயம் முழுவதும் பாதிப்புக்குள்ளாகிறது, பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது. இத்தகைய விபச்சார தொழிலில் இருந்து, விடுபட முடியாத நிலமை, பெண்களுக்கு இருக்கிறது என்பது நாம் அனைவரும் வெட்கி தலைகுனிய வேண்டிய விசயமாகும். இந்தக் கொடுமைக்கு எதிராக முதல்

முதலாக புரட்சி நடத்திய பெருமைக்குரிய பெண்மணிகளாக, மாதவியும், மணிமேகலையும் விளங்குகிறார்கள்.

இதற்காகப் பெரிய விலை கொடுத்திருக்கிறார்கள். புத்தமதத்தில் போய் விழும் அளவுக்கு துரத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களைத் தேடி கண்டுபிடித்து, இங்கு மகளிர்மன்றம் தோன்ற முயற்சிஎடுத்த. மகளிர் நல அலுவலர், மாவட்ட வாரிய உறுப்பினர் இருவரும் நல்ல காரியம் செய்திருக்கிறார்கள். இதற்கு சட்டமன்றத்தில், பெண்விடுதலைக் குரல் எழுப்பி, சாதனை படைத்த டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் பெயர் சூட்டி இருப்பது முற்றிலும் பொருத்தமாகும். இந்த புதிய கட்டிடத்தை நமது அருமை பெருமைக்குரிய, டாக்டர் இந்திரா அவர்கள் திறந்து வைப்பார்கள்

இன்னும் மிச்ச சொச்சம் இருப்போர், இந்த உடல் அழிப்புத் தொழிலைவிட்டு, உடலுழைப்புத்தொழிலில் ஈடுபட வேண்டும். இதற்கான அனைத்து உதவிகளும், அரசுசார்பில் நாங்கள் செய்துதர உள்ளோம். இதை ஊக்குவிக்கும் பொருட்டே, தொழிலில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு. இலவச தையல் எந்திரம் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

இந்திரா : (திறப்புரை)

நான் ஒரு உடல் மருத்துவர். சமுதாய பணியிலும் ஈடுபாடு உண்டு. நமது சமுதாயத்தைப் பிடித்துள்ள பிணி அவ்வளவு

பயங்கரமானது. இதிலும் பெண்கள் மிகவும் கொடிய முறையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தீவிர நடவடிக்கைகளில் இறங்காமல் விமோசனம் இல்லை. இன்னும் நகை, புடவை, பவுடர், சோப் பொட்டு, பூவோடு திருப்திப்பட்டு விடாதீர்கள். நமக்கு ரொம்ப பொறுப்பு இருக்கிறது. நிர்வாகத் துறையா, நீதித் துறையா, அனைத்துத் துறைகளிலும் நாம் சரிபங்கு பெற்றாக வேண்டும். இந்த கையேந்தி வாழும் நிலை மாறி, நம் கையிலும் வைத்து வாழும் வகையில், சொத்து வருமானங்களில் சமபங்காளியாகவேண்டும். சொந்தக் காலில் நிற்கப்பழகவேண்டும்.

இந்த ஊர்பெயர், சர்வதேச பெண்களுக்காகவும் குரல் கொடுத்த பிரதமர் இந்திரா அம்மையாரை நினைவு படுத்துகிறது. இதைப்போல் மன்றத்தின் பெயர் நம் நாட்டு பெண்களுக்காக குரல் கொடுத்த முத்துலட்சுமி அம்மையாரை நினைவுபடுத்துகிறது. இவ்வளவுக்கு பெரிதாக நமக்கு முடியாமல் இருக்கலாம். நம்மை அண்டி வாழவந்த பெண்களை நெருக்காமல் நெருப்பிலே தள்ளாமல் இருக்கலாம் அல்லவா? இன்னும் தவறு நடந்ததாகக் கருதினால், சட்டப்படி வழக்குத் தொடரலாமே தவிர, யாரும், யாரைப் பற்றியும் அவதூறு பரப்ப உரிமை இல்லை. அதில் அர்த்தமும் இல்லை. இதனால் பெண்களைப் பற்றி கதை கட்டிப்பரப்ப முனைகிறவர்களை நாம் ஒன்றுபட்டு நின்று முறியடிக்க

வேண்டும். இதுதான் முதல் பணியும் முக்கிய பணியுமாகும். எந்த பெண்ணைப் பற்றியும் அவதூறு பேசுவதில்லை, கேட்பதில்லை என்ற உறுதிமொழியை நாம் ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்வோம் வணக்கம்.

மெர்சி : (வாழ்த்துரை)
இதில் எமது பங்கு சிறிதுதான். இதற்காக பெரும்பங்கு வகித்துப்பாடுபட்டவர்கள் மணிமேகலையுங் குழுவினரும்தான். இது தொடக்கமே. இன்னும் பல்வேறு பணிகள் தொடர்ந்து நடைபெறஇருக்கிறது உழைக்க அவர்களும் தயாராக உள்ளனர், ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து உதவ நாமும் தயாராக உள்ளோம். உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் கோரி, வாழ்த்தும் வணக்கமும் கூறிவிடை பெறுகிறேன்

கருணாநிதி: (வாழ்த்துரை)
இங்கு மகளிர் விடுதலையில் ஒரு ஆடவனுக்கு என்ன பங்கு என்று கேட்கலாம். இதில் சமூக நலவாரியத்தில் நான் ஒரு அலுவலர் என்பது மட்டும் பதில் இல்லை. தனிப்பட்ட முறையில் பார்த்தாலும், தாய் என்ற பாத்திரம் ஒருவருக்கு மிகவும் அர்த்தம் தரக்கூடியதாகும். ஆம், உறவுகளில் எல்லாம்தலையானதாகும். இத்தகைய தாய்குலம் உரிமையோடும், பெருமையோடும் வாழ வேண்டும் என்று விரும்புவது நமது கடமை அல்லவா? இனி நிலத்துக்கு ஒப்பவே பயிர், மரத்துக்கு ஒப்பவே கனி இருக்க முடியும். "தாயைப்போல் பிள்ளை

நூலைப்போல் சேலை'' என்று ஊரில் பழமொழி வேறு இருக்கிறது. இதனால் நல்ல குடிமக்கள் உருவாக தாய்குலம் உயர வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்த அடிப்படையில் பார்த்தாலும் தாய்க் குலத்தின் விடுதலைக்குப் பாடுபடுவது ஒரு ஆடவனின் இன்றியமையாக் கடமை மட்டுமல்ல உரிமையுமாகும். இனிய வாழ்த்துக்கள். வணக்கம்.

மணி : (நன்றியுரை)
அனைவருக்கும் நன்றி வணக்கம். இதோடு மகளிர் சேர்ந்து கதாகாலட்சேபம் நடத்த இருக்கிறோம். அமைதி காத்துஆதரிக்க வேண்டும்.

கதா, காலட் சேபம்

உரை : அதாவது, அத்த காலத்திலே இருந்து லோகத்திலே பெண்கள் அனுபவித்துவந்த கொடுமைகள் என்ன, எவ்வளவு தெரியுமோ?
-சொல்லுங்கோ

பாட்டு: அன்னைகுலம் பட்ட அவஸ்தை
கொஞ்ச நஞ்சமோ? - ஆமா,
கொஞ்ச நஞ்சமோ?
அந்தோ! சொல்லப்போனால் அவையோர்
நெஞ்சம்தாங்குமோ - ஆமா,
நெஞ்சம் தாங்குமோ?
கன்னிச் சோதனையிட்டுக்
கண்டபடி கொன்றனர் - ஆமா,
கண்டபடி கொன்றனர்
கயற்றால் கட்டி இழுத்து
சந்தையில் விற்றனர் - ஆமா,
சந்தையில் விற்றனர்

உதவாது என்று சொல்லி உயிரோடு
புதைத்தனர் - பெண்
குழந்தையைப் புதைத்தனர்
உடன்கட்டை ஏறச்செய்து உயிரோடு
எரித்தனர் - ஆம்,
உயிரோடு எரித்தனர்
''குழந்தை மணம்'' என்ற
குழியிலே தள்ளினர் - படு
குழியிலே தள்ளினர்
விதவை கோலம் தந்து வீட்டிலே
அடைத்தனர் - ஆம்,
இருட்டிலே தள்ளினர்
விபச்சாரக் குற்றம் சாட்டிவீதியில்
அடித்தனர் - ஆமா,
வீதியில் அடித்தனர்
சூனியக்காரி பட்டம் சூட்டி சூழ்ச்சியால்
அழித்தனர்-ஆமா,
சூழ்ச்சியால் அழித்தனர்
கல்வியும் மறுத்தனர், முகத்தைக்
காட்டாமல் மறைத்தனர் - ஆமா
மூடி மறைத்தனர்

உரை : இப்படியாக நெஞ்சம் பதறிட, நேர்மை கதறிட தஞ்சம் ஏதுமின்றி தாய்க்குலம் தவித்தது-ஆமா, தாய்க்குலம் தவித்தது. இப்போது, கோயிலில் சாமிக்கு பொன்னும் பொருளும் கொடுக்கிறார்களே - ஆமா கெடுக்கிறார்கள். பொங்கல் இட்டுப் படைக்கிறார்களே-ஆமா படைக்கிறார்கள் இதைப் போல் கன்னிப்பெண்களையும், சாணிக்கைப் பொருளாக்கிவிட்டார்கள் -அப்படியா, அநியாயம்
இந்த பொன்னையும், பொருளையும் சாமி எடுத்துக்கொள்ளுதோ - இல்லை

இனி பொங்கலை சாமி வந்து சாப்பிடுதோ
-இல்லை
இவை வேறு வழியாகத் திருப்பி விடப்பட்டு, ஆசாமிகளைப் போய் அடைந்தது. இப்படியே இந்த கன்னிப் பெண்களை வைத்து கறுப்புவாழ்க்கையும் நடந்தது-அய்யோ.
பாவம்.

பாட்டு: கோயில் புறங்களிலே; இவர்கள்
கோட்டையும் அமைத்தனர் - ஆமா,
அமைத்தனர்
வாயிலில் நின்றபடியே; தெருவில்
வருவோரை அழைத்தனர் - ஆமா,
அழைத்தனர்
பாய் விரித்து தந்தனர்; உடலை
பணத்துக்கு விற்று வந்தனர் - ஆமா,
விற்றுவந்தனர்

உரை: இது வாழ்வானதா? இல்லை தாழ்வான்து, இவர்கள் வீழ்ந்தது மட்டுமா? இவர்களால் சமுதாயமே பாழ்பட்டது. இவர்கள் கெட்ட கேட்டிற்கு, தேவதாசி பட்டம் வேறு. இந்தப்பரம்பரையில் தான்;

பாட்டு: மாதவிக் கொடியாளும் வந்தனள்;
அந்தக்கொடி
மலர் மணிமேகலையும் வந்தனள் - ஆமா,
வந்தனள்
பாதகத் தொழிலிது செய்யோமென்று
பாரதிர முழக்கமிட்டு நின்றனர் - ஆமா,
நின்றனர்

உரை: ஊரார் பழித்தனர். உற்றார் உறவினர் பகைத்தனர். பாராள்வோரும் நெருக்கிப் பார்த்தனர். பணிந்தனரா, மாதவியும் மணி மேகலையும்? துணிந்தனர். துறவு வேடம்

பூண்டு காவி உடை அணிந்தனர். ஆனாலும் பரம்பரை தொடர்ந்தது.

பாட்டு: பொன்னையும் பொருளையும்; மக்கள்
போடும் காணிக்கை யாவையும்
-காணிக்கை யாவையும்
கன்னக்கோல் ஆசாமிகள்; நம்பிக்
கை வைப்பதை தடுக்கவே-ஆமா, தடுக்கவே
முன்வந்த அரசும்கூட; தேவதாசி
முறையினை கண்டுகொள்ளவில்லை-ஆமா,
கண்டுகொள்ளவில்லை

உரை: இதனால் தேவதாசிப் பட்டம் பெற்றோர் தொகை பெருகியது. இவர்கள் தொழிலில் கொடிகட்டிப் பறந்தார்கள். இப்படி சமுதாயத்தின் ஒருபகுதி கழங்கப்பட்டு இருந்தது. இந்த சமயத்தில் தான் மருத்துவர் திலகம், மாதர்குலமாணிக்கம், முத்து லட்சுமி அம்மையார் வந்தார். முதல் முதலில் சட்டமன்றம் சென்றார். சென்றவர் பத்தோடு பதினொன்று அத்தோடு நானும் ஒன்று என்று நின்றாரா? இல்லை. பகுத்தறிவோடு சிந்தித்தார். மனிதப் பண்பை ஏன்? நாகரீகத்தையே வேரறுக்கும், இந்த தேவதாசி முறைக்கு தீயிடுங்கள் என்று முழக்கமிட்டார்,

பாட்டு: தேவதாசி என்றொரு முறை; இந்த
தேசத்தில் இருப்பது பிழை - ஆமா,
இருப்பது பிழை
பாவம், அறியாப் பெண்கள்; கெட்டுப்
பாழாகும் கொடிய நிலை - ஆமா,
கொடிய நிலை
நாவும் சொல்லிடக் கூசுதே; மனித
நாகரீகம் விலை போகுதே - ஆமா,
விலை போகுதே

ஆவன செய்திடுவீர் என்றே; சபையில்
ஆர்ப்பரித்து முழக்கமிட்டார் - ஆமா,
முழக்கமிட்டார்

உரை: இப்போது சபையில் இருந்த சத்தியமூர்த்தி யார், ''இது சாத்திரம் அன்றோ, இதில் சர்க்கார் தலையிடல் நன்றோ என்று கேட்டார். இதனால் ஆத்திரம் கொண்ட பெரியார், வெளியே இருந்து அம்மை யாருக்கு வேண்டும் ஆதரவு தந்தார்.

பாட்டு: இழிவைத் துடைத்திடுவீர் - பெண்
இனத்துக்கு விடுதலை தருவீர் -
விடுதலை தருவீர்
பழிபாவம் செய்யவோ, சாத்திரம்; இது
பரிதாபம் அல்லவோ, அறவீர் -ஆமா,
அறிவீர்
அழிவைத் தடுத்திட வருவீர்; மக்கள்
அனைவரும் சுயமரியாதை பெறுவீர்!-ஆமா
சுயமரியாதை பெறுவிர்

உரை: கர்ஜித்தார், பெரியார். இப்படியாக சட்ட மன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் வாதப்பிரதிவாதங்கள் வெடித்து கிளம்பின, தூள் பறந்தன. ''சட்டத்தை எதிர்த்து ஜெயிலுக்கு போவேனே தவிர, சாத் திரத்தை எதிர்த்து நரகத்துக்கு போக மாட்டேன் என்று சத்தியமூர்த்தியார் எச்சரித்தார்.

இதற்கு, அம்மையாரோ, "இந்த தேவதாசி முறையை வைத்துத்தான் சாத்திரத்தைக் காப்பாற்ற வேண்டும் என் றால், இனி உங்கள் பெண்களை வைத்து தாராளமாகச் செய்யலாம் என்று பெரியார் மொழியில் சூடாகக் கேட்டார். சத்திய

மூர்த்தியார் ஒருவாறாக உட்கார்ந்தார். தேவதாசி ஒழிப்புச்சட்டம் ஓகோவென்று நிறைவேறியது. இருந்தாலும் இவர்கள் கொட்டம் அடங்கியதோ? இல்லை. இந்தக் கள்ளச்சாராயம் புகுந்து கொண்டு ஆட்டம் போடுவது போல் இந்தக் கறுப்புத் தொழிலும் ஒருபுறம் நடந்தே வருகிறது. இவர்களுக்கு இறுதியாக ஒரு எச்சரிக்கை நோட்டீஸ் விடப்பட்டிருக்கிறது. என்ன தெரியுமோ? எய்ட்ஸ் தான், அது.

பாட்டு: வந்தனம் மிக வந்தனம்
வந்த பெரியோருக்கும்; ஆதரவு
தந்த தாய்மார்களுக்கும்
சொந்த சகோதரிகள்
சோர்வின்றி உழைத்தவர்கள்
பந்து மித்திரர்கள்
பாதுகாப்பு அணியினர்; அனைவருக்கும்
வந்தனம் மிக வந்தனம்.

காட்சி - 14

(கண்ணகி இல்லம்)

(வீட்டில் கோவலன், வெளியே இருந்துவரும் கண்ணகியிடம்)

கோவ: இப்படி அடிக்கடி போறியே! இதற்கு என்ன அர்த்தமாம்?

கண் : அவசியம் இருக்குது போறேன்.

கோவ: அதுதான் என்ன அவசியம்'னு கேட்கிறேன்.

கண் : சொன்னால் உங்களுக்குப் புரிய வேண்டுமே.

கோவ: புரியும்படியா சொல்வது தானே.

கண் : வேலை இருக்குது போகிறேன்.

கோவ: வெளியே போகிற பெண்களை ஊர்'ல வித்தியாசமா பார்க்கிறதும், பேசுறதும் உனக்குத் தெரியுமா?

கண் : பொழுது போகாதவங்க, பேசட்டும். நமக்கு பொழுது போதவில்லையே.

கோவ: நான் கேட்கிறேனே. என் காதில் விழுகிறதே.

கண் : காதில் பஞ்சை வைத்து அடைத்துக் கொள்ளுங்கள்.

கோவ: என்ன'டி, கெஞ்சினால் மிஞ்சுகிறாயே.

கண் : இல்லாமல் கொஞ்சுறதுக்கா எனக்கு நேரம். இந்த 'டி'க்கு முந்தின எழுத்து தான் 'டா' நினைவு இருக்கட்டும்.

கோவ: ஆமா, பெரியார் திடலுக்கும் போறியாமே.

கண் : அது என்ன, போகக்கூடாத இடமா?

கோவ: பெண்கள் போகக்கூடாது தான்.

கண் : பெண் விடுதலைக்கு முழுமையாகக் குரல் கொடுத்தவரே, பெரியார்தான்.

கோவ: இந்தபெரியார், 'கணவனை விட்டு மனைவி கண்டவனை விரும்புவதைக் குற்றமாக்கக் கூடாது' என்றவர், தெரியுமா?

கண் : இதைத் தவிர உங்களுக்கு வேறு நினைப்பே வராதா?

கோவ: இதைவிட ஒரு கணவனுக்கு முக்கிய கவலை என்ன இருக்க முடியும்?

கண் : இதற்கும் அவசியம் இருக்கும், இல்லாமல் மணவிலக்கு, மறுமணம், என்பதற்கு என்ன அர்த்தமாம்? இதைப் போய் நீங்கள்

பெரிசு படுத்துவதுதான் ஆச்சரியம்?

கோவ: இப்படி குத்திப் பேசறியே! இந்த மண விலக்கு, மறுமணம் என்ற வார்த்தைகள் உன் வாயில் வரலாமா? நீ ஒரு பத்தினி. உத்தமிகளுக்கு உதாரணமாய் இருக்க வேண்டியவள்.

கண் : இப்படி ஏன் பெரிய வார்த்தைகளை கூறி பித்தலாட்டம் பண்றீங்க? இங்கே உத்தமியாக, பத்தினியாக வேண்டாம். சாதாரணமாக ஒரு பெண்ணாக வாழ அனுமதிக்கிறார்களா?

கோவ: இல்லாமல் மண்ணாகவா வாழ்கிறார்கள்?

கண் : இப்போதும் பெண்கள், மண்ணாகத்தான் மதிக்கப்படுகிறார்கள். இவர்களைப் பெண்ணாக மாற்றத்தான் பாடுபட்டுவருகிறோம்.

கோவ: இது அவங்க அவங்க தனிப்பட்ட விசயம். இதில் அனாவசியமாகத் தலையிட்டுக் குழப்பாதே. இன்னும் பெண் என்றால் வீடு, கணவன், குழந்தை குட்டியோடு நிற்க வேண்டும். இதுதான் அவளுக்கு உலகம்.

கண் : இப்படி பெண்களைக் குறுகிய வட்டத்தில் நிறுத்தி வைக்கப் பார்த்தால் இனி நடக்காது.

கோவ: பரந்த வட்டத்திற்குப் போய் என்ன ஆச்சு? பத்தினித்தன்மையை இழந்தது தான் மிச்சம். பருவமழை கூட இப்பம் பெண்களைப் பார்த்தால் திரும்பி போய் விடுது.

கண் : இனி, ஆண்கள் பத்தினித் தன்மையோடு இருந்து, மழையை வரவழைத்துக் காட்

டலாமே! யார் தடுக்கிறது!

கோவ: வர வர உனக்கு பணிவே இல்லாமல் போயிட்டுது. கணவனிடம் பேசுகிறோம் என்பதையே மறந்துவிடுகிறாய்.

கண் : கணவன் என்றால்..........!

கோவ: உன்னைக் கட்டியவன்; உனக்கு வேலி போட்டவன்.

கண் : இது 1987.

கோவ: 1987, கண்டபடி நடக்கச் சொல்லுதா?

கண் : கண்டபடி யார் நடக்கிறது? கருத்துப் படிதான் நடக்கிறேன்.

கோவ: இரண்டு கருத்துக்கு ஒரு வீட்டில் இடம் இருக்கலாமா?

கண் : இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கோவ: இதற்கு நீ வீட்டில் இருக்க வேண்டுமே!

கண் : வெளியே கடமை இருக்கிறதே!

கோவ: அதுதான் வேண்டாம் என்கிறேன்.

கண் : வீட்டில் கிடைக்காத அமைதி அதில் கிடைக்கிறதே.

கோவ: அதனால் உனக்கு அமைதி கிடைக்க லாம். ஆனால் வீட்டின் அமைதி குலைகிறது.

கண் : இதற்கு உங்கள் குறுகிய நோக்கம் தான் காரணம்.

காட்சி - 15

(மல்லிகா இல்லம்)

(வெளியே பாத்திரங்கள் வந்து விழுகின்றன. வீட்டினுள் ஒரு பெண்ணின் சத்தம் கேட்கிறது)

கோவ: (எட்டிப் பார்த்து) பார்த்து வீசுங்க'ம்மா

மல்லி: யார், நீங்க?

கோவ: நான் டாக்டரைப் பார்க்க வேண்டும்.

மல்லி: பழசு பாழாய் போன பாத்திரங்கள்.

கோவ: ஒரு பக்கத்தில் ஒதுக்கிப் போட்டிருக்கலாமே!

மல்லி: ஒதுக்கிப் போட்டால் புதுசு வராது. ஒழிந்து போகட்டும்.

டாக்: (உள்ளே இருந்து) இங்கே வாங்க......!

கோவ: (உள்ளே போய் உட்கார்ந்து கொண்டே) இங்கே என்ன ஒரே அமர்க்களமாக இருக்குது?

டாக்: இது வழக்கமாக நடப்பது தான். இப்படித்தான் பிடிக்காத பொருள்களை எடுத்து வீசுவாள். வாய்க்கு வந்தபடி பேசுவாள்.

கோவ: பார்த்துக் கொண்டு இருக்கீங்களே.

டாக்: இல்லாமல் நானும் சேர்ந்து கொண்டு வீசவா?

கோவ: கொஞ்சம் அடக்கி வைக்க வேண்டாமா?

டாக்: இது வார்த்தையில் அடங்குகிற பெண் இல்லை. இனி அடித்தாலோ அடிபட்ட

பாம்பாக மாறுவாள். இதில் நானாக எதுவும் செய்வதற்கு இல்லை. தானாக திருந்தினால் சரி என்று விட்டுவிட்டேன்.

கோவ: ''சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளே யாமாகில் கூறாமல் சன்னியாசம் கொள்' என்றார்கள், சான்றோர்கள்.

டாக் : சும்மா சொல்லி விடலாம். சரியாக நடப்பவங்களுக்கு சன்னியாசமும் சுலபமாக இருக்காது, ஆமா.

கோவ: நான் தற்கொலை பண்ணிடலாமா'ன்னு பார்க்கிறேன்.

டாக் : நீங்களும், இதே கேஸ்தானா?

கோவ: நான் உயிர்பிழைத்து எழும்பியதற்காக வருத்தப்படுகிறேன், டாக்டர்.

டாக் : எங்கோ வெட்டுண்டுகிடந்த உங்களை எடுத்து வந்து சிகிட்சை செய்தேன். என்ன சிரமம்? எவ்வளவு செலவு? எல்லாம் பாழ் என்கிறீர்கள்.

கோவ: உடலை ஆற்றிவிட்டீங்க. உள்ளத்தை ஆற்ற முடியாமல் வந்திருக்கிறேன்.

டாக் : உள்ளதில் திருப்திப்பட முடிவதில்லை. உள்ளத்தினளவே உயர்வு என்கிறதை யாரும் புரியவும் இல்லை. உயர்வுக்காக எதெதையோ செய்கிறார்கள். உலகமே குழம்பித்தான் கிடக்குது. என் வீட்டையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

கோவ: அதைத்தான் பார்க்கிறேனே.

டாக் : ஆனாலும் தற்கொலை பண்ணுவதை விட தாழ்ந்துபோய் விடுவதே மேல். ஏன்'னா தற்கொலையை விட தாழ்வானது

எதுவும் இல்லை.

கோவ: தாழ்ந்து போனால் தன்மானம் என்னா கிறது?

டாக் : இதிலும் ஒருமானம் பார்த்தால் ஒரு மானம் இல்லை. தன்மானத்தைப் பார்த் தால் குடும்ப மானம் குளோஸ்.

கோவ: அந்தக் காலத்தில் 'கல்லானாலும் கண வன் புல்லானாலும் புருஷன்'னு இருந் தது. அமைதியா குடும்பம் நடந்தது.

டாக் : அதெல்லாம் இனி நடக்காது. பேசாமல் மண்ணானாலும் மனைவி புண்ணாக்கா னாலும் பெண்டாட்டி'ன்னு பிளேட்டை மாற்றிப் போட்டுவிட வேண்டியதுதான்.

கோவ: இதனால் நமக்கு தலைகுனிவு இல்லையா?

டாக் : கணவன் மனைவி சண்டை போட்டால் மட்டும் தலைகுனிவு இல்லையா?

கோவ: வீட்டில் இருந்தாலாவது பரவாயில்லையே. வெளியே சுற்றப் போய் விடுகிறாள்.

டாக் : போகட்டுமே, நம்ம கையும் காலும் கொண்டா போகிறார்கள்? போய்ப் பார்க்கட்டும்.

கோவ: இப்படி ஒரு காவலும் வேலியும் இல் லாமல்.........!

டாக் : இதில் நம்ம காவல்காரன் ஆவதற்கு என்ன வந்தது? மண்ணுக்கு வேலி போடலாம். பெண்ணுக்கு வேலி போட முடியுமா? இது வேலை மெனக்கெட்டு செய்வதுதான்.

கோவ: நம்ம மானம் அல்லவா, கப்பலேறுது?

டாக் : இதற்கு நம்ம மானம் ஏன் முந்த வேண்டும்'ன்னு கேட்கிறேன். பெண்கள் என்ன, மானம் இல்லாதவங்களா?

கோவ: இல்லாமலா? பெண்கள் ஈனப்பிறவிகள் தானே. இதுவரைக்கும் நம்மதானே அவங் களையும் சேர்த்துக் காப்பாற்றி வருகிறோம்

டாக் : இல்லை. நிறைகாக்கும் காப்பே தலை'ன்னு பொதுநீதியே இருக்குது. இதை நம்ம புரிந்து கொள்ளவில்லை. அவ்வளவுதான்.

கோவ: இனி நமக்கு என்ன மிச்சம் இருக்குது'ன்னு கேட்கிறேன்.

டாக் : இன்னும் ஒருவர் தாழ்வதால் மானம் போய்விடுவதும் இல்லை, இதைப்போல் பிறரைத் தாழ்த்துவதால் மானம் வந்து விடுவதும் இல்லை. தவறு செய்யாமல் வாழ்கிற அளவுக்குத்தான் ஒருவருக்கு மானம் இருக்க முடியும்; தெரியுமா?

கோவ: இப்படிப் பார்த்தால் எல்லோரும் ஓரளவுக் காவது தவறு செய்கிறவர்களாகத்தானே இருக்கிறார்கள்.

டாக் : இருந்தால் எல்லோரும் ஓரளவுக்கு மானம் இழந்தவர்கள்தான்.

கோவ: இது எப்படி'ங்க, மானமிழந்து ஒரு வாழ்வா?

டாக்: ஒப்புக்கொள்ள சிரமமாய் இருக்குதா? ஆனால் உண்மை இதுதான்.

கோவ: ஹி. ஹி. ஹி.

டாக் : ஹி. ஹி. ஹி. ஹி.

(இதைப் பார்த்து மல்லிகா ஓடி வருகிறாள்)

மல்லி : இப்பம் என்னைச் சொல்லித்தானே சிரிக்கிறீங்க?

கோவ: இது எங்க விசயம்'மா.

மல்லி : இவருக்கு எப்போதும் என்னைச் சொல்லிச் சிரிக்கிறது ஒரு கொண்டாட்டம்.

கோவ: இவ்வளவு சத்தம் போடுறீங்களே'ம்மா.

மல்லி : இவ்வளவு சத்தம் போடுறதால்தான் இவர் சதையாவது மிச்சம் இருக்குது. இல்லை'ன்னா சதையும் அறுத்து எடுத்துட்டுப் போயிருவாங்க.

கோவ: இலவசமா கிடைத்தால் சதை என்ன, விசத்தையும் வாங்கிச் சாப்பிட்டு விடுவாங்க.

டாக் : விசத்தைச் சாப்பிட்டால், செத்துப் போயிட மாட்டாங்களா?

கோவ: இங்கு சாகிறதும் பிழைக்கிறதும் பார்த்தா நடக்கிறான்? குடிக்காதே, புகைபிடிக்காதே'ன்னு சொல்லிக் கொண்டுதான் வருகிறோம். குடிக்காமல் நூறு ஆண்டு வாழ்வதைவிட குடித்துவிட்டு ஐம்பது ஆண்டில்செத்துப்போகிறோம்,என்கிறானே.

டாக் : இது ஒரேயடியாக கொல்வது இல்லையே. நோயில் அல்லவா விழுகிறான்?

மல்லி : இலவசமா தூக்கி விடுறதுக்குத்தான் ஆள் இருக்குதே!

டாக் : இங்கே பாதிக்கு மேல் நோய் பாதித்து வருவது இல்லை. பயந்து வருகிறவர்கள், பாவனையாக வருகிறவர்களும் தான் அதிகம். இவர்களைப் பார்த்து

ஊசி, மருந்து'ன்னு போட்டுப் பிடுங்கு றாங்க. இதனால் டாக்டர்களுக்குப் பணம் சேருகிறதாக இருக்கலாம், பண்பு தேய்கி றதே. இவர்களுக்கு அட்வைஸ் பண்ணி அனுப்பினலே போதுமானது.

மல்லி : இவரைப்போல் டாக்டர்கள் இருந்தால் நோயில் விழுவதற்கும் கணக்குப் பார்க்க மாட்டார்கள்.

கோவ: இவங்களைப் போல் உண்மையான டாக் டரைப் பார்க்க முடியாதம்மா. ரெம்ப நேர்மை.

மல்லி : இங்கே வரவங்க, டாக்டர் உண்மையா னவரா'ன்னு பார்க்கிறது இல்லை. கட் டிடத்தின் உயரத்தைத்தான் பார்க்கிறாங்க. நேர்மையை யார் பார்க்கிறது? நிலபுலன் களைத்தான் பார்க்கிறாங்க. இனி புதிய மாடல் வீடுதானா; பெட்ரூம் எப்படி? டைனிங்கால் எப்படி? கிச்சன் எப்படி? குளு குளு வசதி இருக்குதா'ன்னு பார்க்கிறாங்க. இன்னும் ஃபாரின் சாமான்கள், புதிய ஃபாசன்'ல நவீன டிசைன்'ல துணிகள் அணிகள் இருக்குதா'ன்னு பார்க்கிறாங்க வசதியைத்தான் பார்க்கிறாங்க. டீசன்சி யைத்தான் பார்க்கிறாங்க. இந்த வருட மாதிரிகார் இருக்குதா, மாருதி வான் இருக் குதா'ன்னு பார்க்கிறாங்க. இது இல்லை யா, அது இல்லையா'ன்னு கேட்கிறபோது நான் தானே புழுகிச் சாகிறேன். இவை எல்லாம் இலவசமா, கிடைக்குதா, என்ன? தொழிலில் யேர்ன் பண்ணினால் தானே ஸைன் பண்ணமுடியும்.

டாக் : நோ. நோ. நோ. நான் நேர்மையாக

நடக்க முயற்சிப்பது எவரும் அறிய வேண்டும் என்பதற்காக அல்ல. எனக்கு அமைதி வேண்டும் என்பதற்காகத் தான் நான் ஒரு டாக்டராகப் பிறக்கவில்லை. இந்த சமுதாயம் தான் என்னை ஒரு டாக்டராக்கியது. இதில் சமுதாயத்தின் பங்குதான் அதிகம். என்ன பாடுபட்டு மருத்துவ முறைகளை, மருந்து வகை களைக்கண்டு பிடித்தார்கள். எவ்வளவு பங் கப்பட்டு, மக்கள் ஏற்கும்படி செய்தார்கள். இதை பணம் சம்பாதிக்க என்று பயன் படுத்தினால் நான் எப்படி அமைதியாக வாழ முடியும்? இலவசமாகப் பெற்றதைத் தான் இலவசமாகக் கொடுக்கிறேன்.

கோவ: இருந்தாலும் நமக்கு வாயும் வயிறும் தனி இல்லையா?

டாக் : அதற்கு ஒரு குறைவும் இல்லை.

மல்லி : எனக்கு ஒரு நல்ல பிரிட்ஜ் உண்டா? கிரைண்டர் உண்டா? மிக்சி உண்டா?

டாக் : இங்கே சமையலே நடப்பது இல்லையே. இருந்தாலும் உடனுக்குடன் எல்லாம் வாங்கிவிடுவதுதான். எப்படியாவது நாச மாக்கி விடுவாள். பொறுப்பில்லாமல் போட்டு கெடுத்துவிடுவாள்.

கோவ: இந்த சமையலை கவனிக்கலாம் இல் லையா?

மல்லி : சமையல் ஃபோர் அடிக்குது.

கோவ: ஆள் வைத்து செய்யலாம் இல்லையா?

மல்லி : அவளுகளை மேய்ப்பதைவிட, ஹோட்டலில் வாங்கி சாப்பிடலாம்.

கோவ: வியாபாரத்தில் நாலும் நடக்கும்.

மல்லி : வீட்டிலும் நாம் நினைப்பது போல் இருக்குமா?

டாக் : உபயோகப்படுத்தாமல் பொருளுக்கு என்ன மதிப்பு?

மல்லி: உபயோகப்படுத்துறது வரவங்களுக்குத் தெரியுமா? உண்டா இல்லையான்'னு தான் பார்க்கிறாங்க.

டாக் : இதனால் தான் எப்போதும் புதுசு கேட்கிறது. வரவங்களுக்குப் பளபளப்பாத் தெரியும் இல்லையா? இதோ பாருங்களேன்; இந்த மூலையில் ஒரு ரேடியோ, அந்த மூலையில் ஒரு ரேடியோ. இருந்தாலும் ஒரு பாட்டு, செய்தி கேட்கிறது கிடையாது. இனி நம்ம கேட்டாலும் சத்தம் காதை அடைக்குதே'ன்னு கத்துவாள். டி.வி.யைப் பாருங்க. எப்போதும் மூடித்தான் இருக்கும்

மல்லி : வரவங்க. ரேடியோ கேட்கிறீங்களா, டி.வி. பார்க்கிறீங்களா'ன்னு விசாரிக்கிறதில்லை. இருக்குதா'ன்னு பார்க்கிறாங்க. நமக்கும் ஒரு பெருமை. புதிய மாடலா இருந்தா, இன்னும் பெருமை.

டாக் : இப்படி பிறரைப் பார்த்து நடப்பதும், பிறர் பார்க்க நடப்பதும் வாழ்க்கையல்ல. நாடகம்தான்.

மல்லி : இல்லாமல் நாமே நம்மைப் பார்த்து சந்தோசப்பட முடியுமா? கிறுக்கு'ன்னு தான் சொல்லுவாங்க.

கோவ : இத்தனை பத்திரிகைகள் வாங்கி அடுக்கி இருக்கீங்களே. படிக்கிறதுக்குத்தானா?

டாக் : படிக்கிறது எங்கே? பழைய பேப்பர் கடைக்குப் போவதுதான்.

மல்லி : கடைக்காரங்க வந்தே எடுத்துருவாங்க.

டாக் : கசங்காமல் கிடைக்கிறது'ல்ல.

கோவ: இப்படி காசைக் கரியாக்கிறீங்களே. இதில் ஒன்றோ இரண்டோ வாங்கினால் போதாது.

மல்லி : இத்தனையும் என் ஃபிரன்ஸ்கள் வாங்கிற பத்திரிகைகள். இதை அவர்களிடத்தில் சொல்லும் போது பெருமையா இருக்கும். இன்னும் பத்திரிகை போடுகிறவன், ஏஜன்ட் எல்லாரிடமும் பெருமை.

டாக் : பழைய பேப்பர் வாங்கிறவனிடமும் பெருமை தான்.

கோவ: இதெல்லாம் ஒரு பெருமையா?

மல்லி : இல்லாமல் இவருக்கு மனைவியா இருந்து எனக்கு என்ன பெருமை? இவரா ஒரு டாக்டர்'ன்னு கேட்கிறாங்களே! டீசன்சியே கிடையாது.

டாக் : இந்த மாதிரி போலிகளோடு சேர்ந்து வாழ வேண்டியது இருக்குது. இதோ பாருங்க, ரேடியோவில் படிந்திருக்கிற தூசு.

மல்லி : நானா போலி? ரேடியோவை உன் தலையில் போட்டு உடைக்கிறேன், பார். (ரேடியோவைத் தூக்குகிறாள்)

டாக் : மல்லி, தலையில் போட்டால் தலைதான் உடையுமே தவிர ரேடியோ உடையாது. தரையில் போட்டு உடை

கோவ: இவ்வளவுக்கு தாழ்ந்து போறீங்களே, சார்

டாக் : இரண்டு பேரில் ஒருவர் தாழாமல் முடியுமா?

அவளுக்குத் தாழ்ந்து பழக்கம் இல்லை. பணிவு என்பது அந்த பரம்பரைக்கே கிடையாது. அதனால் நானே தாழ்ந்து விடுகிறேன்.

கோவ: சரி டாக்டர், நான் வருகிறேன்.

(புறப்பட்டு போனவன், திரும்பி வருகிறான்)

டாக் : என்ன, ஏதாவது மறந்து விட்டுட்டீங்களா?

கோவ: இங்கே கொஞ்சம் வாங்க (டாக்டர் வர காதோடு காது வைத்து) இவள் பெயரில் வீடு, ஆஸ்பத்திரி எல்லாம் வச்சிருக்கீங்களே!

டாக் : இவள் மல்லியா இருந்தபோது வச்சேன். இப்படி வில்லியா மாறுவாள்'ன்னு தெரியாதே.

கோவ: சரி, போங்க.

(புறப்படுகிறான்)

காட்சி - 16

(கண்ணகி இல்லம்)

(கண்ணகி, மாதவி, மணிமேகலை, காரில் வந்து இறங்குகின்றனர்)

கண் : (வீட்டைச் சுட்டிக்காட்டி) உள்ளே போய் உட்காருங்கள். உடனே வந்துவிடுகிறேன்.

கோவ: (உள்ளே வரும் மாதவி, மணிமேகலையை ஊற்றுப் பார்த்து) ... . யார்?

மாதவி: என்னைத் தெரியவில்லையா?

கோவ: எப்போதோ பார்த்த முகம் மாதிரி இருக்குது.

மாதவி: எப்போதோ, அல்ல. ஏழு ஆண்டுகளாக பார்த்துப் பழகி ஒட்டி, உறவாடி......!

கோவ: ஆமா, மாதவி. என்ன இந்தப் பக்கம்?

மாதவி: ஏதோ நம்ம உறவின் விளைவாய், ஒரு குழந்தையும் பெற்று.........

கோவ: பழைய குப்பைகளைக் கிளறாதே.

மாதவி: இப்போது உங்களுக்குப் பழையதாகி விட்டிருக்கலாம். இன்னமும் எனக்கு பசுமையாகத்தான் தெரியுது.

கோவ: புரியுது. புரியுது. பழைய உறவைப் புதுப்பிக்க வந்திருக்கிறாய். உரிமை பாராட்ட இல்லையா?

மாதவி: உங்களைப் பார்க்க குழந்தை வந்திருக்கிறாள்.

கோவ: இது கணக்கில் சேராதே. இதைக்காட்டி உரிமை கோர முடியாது.

மாதவி: அந்தமாதிரி ஆசை எனக்கு இல்லை.

கோவ: பல்டி அடிக்காதே. பணம் தீர்ந்து விட்டதைப் பார்த்து தானே பாட்டை மாற்றிப் பாட உனக்கு தைரியம் வந்தது.

மாதவி: உங்கள் பாட்டுக்கு பதிலாகப் பாடினேனே தவிர, நான் எந்த தவறும் செய்யவில்லை. பணம் தீர்ந்த அதைரியத்தில் நீங்க தப்புக் கணக்குப் போட்டு வந்திருக்கீங்க.

கோவ: மடியைப் பார்த்து வாழ்வதுதானே உங்கள் குலம்.

மாதவி: மடியைப் பார்த்து வாழ்வது எங்கள் குலம். மனசைப் பார்த்து வாழ்வது என் குணம்.

கோவ: அது தான் பணம் முழுவதும் கறந்துட்டீங்களே!

மாதவி: நான் கை நீட்டி ஒரு காசு வாங்கினேனா?

கோவ: நீ கை நீட்டி வாங்கல்ல. உன்னைக் காட்டித் தான் கூனி எல்லாம் பிடுங்கினாள்.

மாதவி: இதை புரியத் தவறிவிட்டேன். புரிந்தபின் வருந்தினேன்.

கோவ: இனி வருந்தி என்ன? நான்தான் மொத்தத்தில் தொலைந்தேனே. இன்னும் என்னை ஏன் துரத்திக் கொண்டு வரவேண்டும்.

மாதவி: அக்கா தான் அழைத்து வந்தாங்க.

கோவ: அங்கேயும் வந்து விட்டாளா? அவளுக்கு வேறு வேலைதான் என்ன?

மணி : இப்பம் கூட அவசர வேலையாத்தான் போயிருக்காங்க.

கோவ: வெளியே அவசரம் இருந்தால் போதுமே! வீட்டைப்பற்றி அக்கறை வேண்டாம்.

(இப்போது கண்ணகி வருகிறாள்)

கோவ: இருக்கிற குழப்பம் போதாது'ன்னா, இவங்களை வேறு கூட்டி வந்திருக்கிறாய்?

கண் : இவங்க குழப்பம் செய்ய வரல்ல. குடும்பம் நடத்த வந்திருக்காங்க.

கோவ: யார் யாருடன் குடும்பம் நடத்துவது?

கண் : இதற்கு ஊரை வேறு கூட்ட வேண்டுமா?

கோவ: என்னை அவமானப் படுத்துறது'ன்னே முடிவு பண்ணிட்டியா?

கண் : என்ன அவமானம் என்கிறீங்க?

கோவ: இவங்க யார்'னு அக்கம் பக்கத்தில் கேட்டால்.........!

கண் : இதில் பயப்படுறதுக்கு என்ன இருக்குது? உண்மையை சொல்ல வேண்டியதுதான்.

கோவ; இரண்டு பெண்டாட்டிக்காரன் என்பார் களே! கேவலமா இருக்குமே, கண்ணகி.

கண் : கறுப்பு'ன்னா எத்தனையும் வைக்கலாம். கணக்கில் சேர்த்தால் மட்டும் கேவலமாகி விடும்.

கோவ: இவ்வளவு மட்டம் ஆயிட்டேனா, நான்?

கண் : இது உங்களை மட்டும் அல்ல. இங்கே ஒருவனுக்கு ஒருத்தி என்கிறது, சொல்ற துக்குத்தான். இதில் நிற்கிறது யார்? வெளியே பெண்களைப் பார்த்தால் மூஞ்சி யைக் கொண்டு வருவதற்கு வெட்கமே இல்லை. இருட்டில் தடுமாறுவதைவிட வெளிச்சத்தில் வாழுங்களேன். என்ன கேவலமாகிவிடுமாம்?

கோவ: இப்போது எனககு தேவை கண்ணகி ஒருத்திதான்.

கண் : இது நல்ல தேவைதான்: இந்த தேவை எனக்கும் ஒருகாலத்தில் இருந்ததே

கோவ: அதற்காக இப்போது பழிவாங்குகிறாயா?

கண் : பழிவாங்க நினைத்தால், மாதவியை அழைத்து வந்திருப்பேனா? பாருங் களேன், அம்மாவும், மகளும் எவ்வளவு ஆர்வத்தோடு இருக்கிறார்கள்.

கோவ: இவள் பெரிய தொகையை எதிர்பார்ப் பாளே. நான் வெறும்கையோடு இருப்பது தெரியுமா?

கண் : இப்பம் கையில் காசு இல்லை. இதனால் தான் கண்ணகி தேவைப்படுகிறாள் ஹி ..ஹி...ஹி...

கோவ: இப்படியா, என் தலைவிதி மாறவேண்டும்? சிரி. சிரி.

கண் : இவள் தொகையை எதிர் பார்த்து வரல்ல தொண்டு செய்ய வந்திருக்கிறாள். பணத்துக்காக அல்ல, பதிசேவை, பதிசேவை.

கோவ: இனி மகளுக்கு வரதட்சணை நான் தானே கொடுக்க வேண்டும்.

கண் : இப்பம் வரதட்சணை தான் கிடையாதே. வசதிதான். மொத்தத்தில் உங்களுக்கு சவுரியம்தான்.

கோவ: இப்போது உனக்கு நான்பரிகாசப் பொருளாகிவிட்டேன்.

கண் : பரிகாசம் என்ன? பட்டக்கடணை தீர்க்கிறதுதானே. பழக்கத்துக்கு வந்தால் சரியாகிவிடும்.

கோவ: இப்போது நீ ரொம்ப பேசக் கற்றுக் கொண்டாய்.

கண் : கொஞ்சம் பேசினால் உங்களுக்குப் புரியவில்லையே

காட்சி-17

(அமைதி அரங்கம்)

(பன்னிரண்டு திருமணங்கள் ஒரே மேடையில், மணிமேகலையும், தோழியர்களும், அவரவர் ஜோடிகளுடன் உட்கார்ந்து இருக்கின்றனர்)

கண் : இந்தத் திருமணங்களை பதிவுசெய்ததோடு முடித்திருக்கலாம் இப்படி பகிரங்கமாக நடத்த காரணம் என்ன? இதில் சில படிப்பினைகள் இருப்பதால் தான்; சாதி சமயம் இல்லை; சடங்கு சம்பிரதாயங்கள் இல்லை. வரதட்சணை இல்லை. மண

மக்கள் எடுக்கும் உறுதிமொழிதான் முக்கியம். இங்கு கற்பு என்பது எதோ அணுக்குண்டு வகையைச் சார்ந்தது என்று கற்பனைசெய்துகொண்டுஅலைகிறார்கள். கற்பு என்பது வாக்கு நாணத்தைக்குறிப்பதுதான், ''கற்பு என்பது சொற்றிறம்பாமை'' என்று அவ்வையாரே கூறவில்லையா? இதனால் மணமக்கள் வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும். இதுதான் கற்பு வாழ்க்கை. இதில் இருவருக்கும் முழுபொறுப்பு இருக்கிறது.

இயற்கையில் உயிருக்கு உறவு வேண்டும். இந்த உறவு தூய்மையாக இருந்தாலே வாழ்வில் அமைதி கிடைக்கும். தூய்மையான உறவுக்கு சமத்துவம்தான் அடிப்படை. இதன்படி மணமக்கள் எந்த சந்தர்ப்பத்திலும் சமத்துவ உணர்வுடன் நடந்து கொள்வது மிகவும்அவசியமாகும் இனி ஒவ்வொரு ஜோடியாக வந்து "வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழியை' படிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(இப்போது மணிமேகலை ஜோடி முதலில் எழும்பி வருகின்றனர், இதற்குள் சித்ராபதி உறவினர் சிலரைத் திரட்டிக் கொண்டு வந்து விடுகிறாள்)

மாதவி : வாங்க. வந்து உட்காருங்க.

நபர் -1 : உட்கார வந்தோமா! உண்மையைச் சொல்ல வந்திருக்கிறோம்.

காவலர்: நீங்க திருமணத்தில் கலந்து கொள்ள வந்தவங்க தானே. அப்படி போய் உட்காருங்க.

நபர் - 2: கலந்து கொள்ள வரல்ல. கலகம் செய்ய வந்தோம்.

நபர் - 1: இது குலத்துக்கு விரோதமா நடக்குது'ய்யா.

நபர் - 3: இந்த கலியாணங்கள் நடந்தால், எங்க மானமே போயிடும்.

நபர் - 2: எங்களை குலத்தைவிட்டு விலக்கி வச்சுருவாங்க.

காவலர்: இப்போது குலமே கிடையாதய்யா, ஒன்றேகுலம். தெரியாதா?

நபர் - 2: உங்களுக்குத்தான் குலம் கிடையாது. ஊர்'ல எல்லாம் இருக்குது.

காவலர்: உட்கார்றீங்களா, இல்லையா? எல்லா பயல்களையும் புடிச்சு உள்ளே கொண்டு வச்சுருவேன்.

நபர் - 3: உண்மையைக் கேட்காமல் மிரட்டுறீங்களே'ய்யா.

காவலர்: என்ன உண்மை? என்ன அய்யா உண்மை சொல்லப் போறே. எல்லாரும் மரியாதையா ஊர் போய் சேருங்க, ஆமா.

நபர் - 2: ஊர்'ல போய் தலைகாட்ட முடியாதய்யா.

நபர் - 1: நாங்க உயிரோட இருந்து பிரயோசனம் இல்லை.

நபர் - 3: குலதெய்வம் முளியைத் தோண்டி எடுத்துரும், தெரியுமா?

காவலர்: குலதெய்வத்தை போய் கூட்டிட்டு வா'ய்யா.

நபர் - 2: கூப்பிட்ட இடத்துக்கெல்லாம் வந்துருமா?

நபர் - 3: வழக்கமா, கனவில்தான்'யா வரும்.

காவலர்: யார் கனவில் வந்தது?

நபர் - 3: (சித்ராபதியைச் சுட்டிக்காட்டி) இவங்க கனவில்தான்.

கண் : (மேடையைவிட்டு இறங்கி வந்து) இங்கே என்ன கலாட்டா?

நபர் - 2: இந்த கலியாணத்துக்கு நாங்க சம்மதிக்கல்ல.

நபர் - 1: இது திருட்டுத்தனமா நடக்குது.

நபர் - 3: தடுத்து நிறுத்தாமல் நாங்கள் ஊர் திரும்பமாட்டோம்.

கண் : (சித்ராபதியிடம்) இவங்களை நீதானே திரட்டிக் கொண்டு வந்தாய்.

சித்ரா : இவங்க யாருன்னே தெரியாது'ம்மா. இதுக்கு முன்னால பார்த்ததே இல்லை.

நபர் - 1: இப்படி கையை விரிக்கிறாளே!

நபர் - 2: காட்டிக் கொடுத்துருவாள் போல் இருக்குதே!

நபர் - 3: இனி நம்மதான் போலீசில் மாட்டிக் கொள்ளப் போறோம்!

நபர் - 1: அதுக்குள்ளாலே, நம்ம முந்திவிடுவோம்

நபர் - 2: ஆமா, நடந்ததைச் சொல்லிவிடுவோம்.

நபர் - 3: இந்த சித்ராபதிதான்'யா, எங்களைக் கூப்பிட்டுட்டு வந்தாள்.

நபர் - 1: குடிக்க வாங்கிக் கொடுத்து கூட்டிட்டு வந்தாள்.

நபர் - 2: குடிச்சிட்டுப் போங்கடா, போய் கலகம்

பண்ணுங்கடா'ன்னு கூப்பிட்டுட்டு வந்தாள்.

காவலர்: (சித்ராபதியைநோக்கி,கைத்தடியை ஓங்கி) இவங்களைத் தூண்டிவிட்டது நீதானே!

சித்ரா : இல்லை அய்யா, கனவில் குலதெய்வம் வந்துருச்சு. இந்தக் கலியாணங்கள் நடந்தால் குலநாசம் ஏற்படும்'ன்னு சொல்லிருச்சு.

காவலர்: இவங்களை ஊருக்கு அழைச்சுட்டு போறியா? இல்லது ஸ்டேசனுக்கு வாரியா? ராஸ்கல். கையில் என்ன இருக்குது பார்த்துக்கோ.

சித்ரா : என்னை விட்டுருங்கய்யா. மேட்டுக்குடி காரங்க தான், பணம் கொடுத்தாங்க. சர்க்காருக்குத் தெரியாமல் நடக்குது'ன்னு சொன்னாங்க. போலீசு வருமுன்னு தெரியாத'ய்யா. என்பேத்தி கலியாணத்தை நானும் கண்ணு குளிர பார்த்துட்டுப் போறேன். எல்லாரும் சமாதானமா உட்கார்றோம்.

(அமைதி நிலவுகிறது. அனைத்து ஜோடிகளும் தனித்தனியாக வந்து சமத்துவ உணர்வுடன் நடந்து கொள்வதாக' உறுதி மொழி எடுக்கின்றனர். அறிஞர் பெருமக்கள், மகளிர் பிரதிநிதிகள் வாழ்த்துரையுடன் முடிகிறது)

பின்னர் நிருபர்கள், கண்ணகியைப் பேட்டி காண்கின்றனர்;

நிருபர் : இப்படி சட்டதிட்டங்கள் தெரியாமல் மக்கள் இருக்கிறார்களே!

கண் : இந்த நிலமையைப் போக்கத்தான் அரசுத் துறையும் தொண்டு நிறுவனங்களும் பாடு பட்டு வருகிறோம்.

நிருபர்: தொண்டு நிறுவனங்கள், மான்யம் பெறுவதில்தான் குறியாக இருக்கிறார்களே தவிர, மக்கள் அறிவும் மானமும் பெற வேண்டும் என்பதில் அல்ல என்று சொல்லப்படுகிறதே!

கண் : இன்னும் மான்யம் பெறுவதற்கே போதிய ஆட்கள் வரவில்லையே. இதில் மானம் பெறுவது எங்கே?

நிருபர்: இங்கு நடந்த குழப்பத்திற்கு பின்னணி இருக்கும் என்று கருதுகிறீர்களா?

கண் : இந்த குழப்பம் என்ன, எந்த குழப்பத்திற்குப் பின்னாலும் ஆதிக்க சக்திகள் இருந்தே வரும்.

நிருபர்: இந்தத் திருமண ஜோடிகளை ஒரே இடத்தில் குடியமர்த்த போகிறீர்களா?

கண் : இப்போது நடந்திருப்பது கூட்டுத்திருமணம், இனி நடக்க இருப்பது கூட்டுக் குடும்பம். நூறுகுடும்பங்களை ஒரே பகுதியில் குடியமர்த்த திட்டம் போட்டு இருக்கிறோம். இவர்களுக்கு ஒரே சமையல் கூடம். ஒரே இடத்தில் சாப்பாடு. இவர்கள் கூட்டுறவு வாழ்க்கை நடத்துவார்கள்.

நிரு-1: இந்தத் திட்டத்திற்கு அரசின் ஆதரவு கிடைக்கிறதா?

கண் : இதற்கு வேண்டிய நிலத்தை, இலவசமாக அரசு ஒதுக்கித் தந்துள்ளது. இனிகுடியிருப்புகள் அமைத்துத் தரவும் பல்வேறு நிறுவனங்கள் இசைந்துள்ளன.

நிரு-2 : இத்திட்டம் வெற்றிபெறும் என்று நினைக்கிறீர்களா?

கண் : நிச்சயமாக.

நிரு 2 : இந்த மக்கள் சுயநலம் பிடித்தவர்களாக இருக்கிறார்களே!

கண் : இவர்கள் எதுநலம் என்று தெரியாமல் இருக்கிறார்கள். சுயநலம் பெறுவதற்கு ஒரேவழி பொதுநலம் பேணுவதுதான். வயல் நிரம்பினால் போதுமா? குளம் நிரம்பினால் தானே பயிருக்கு ஆகும்?

நிருபர்: இதையெல்லாம் எங்கே புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

கண் : 'அனைத்துயிர் ஒன்றே' என்றால் ஆமாம் போடுகிறோம். ''தன்னைப்போல் பிறரை நேசி'' என்றால் தலையை ஆட்டுகிறோம். அனைத்துயிர் வேண்டாம். அனைத்து மனிதர்கூட வேண்டாம். அக்கம் பக்கத்து மனிதர் கூடி வாழ முடியாவிட்டால், நமக்கு என்ன அர்த்தம்? நம்ம நடத்துகிற வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்?

நிருபர்: அவசரப்படுறீங்க அர்த்தம் எல்லாம் அடுத்த ஜன்மத்தில்தான். அடுத்த உலகத்தில்தான்.

கண் : கூரையேறி கோழிபிடிக்க முடியாதவன், வானத்தைக் கிழித்து வைகுண்டம் போன கதையாக அல்லவா தெரியுது!

நிருபர்: இது ஆன்மீகம். அப்படித்தான் தெரியும்.

கண் : அன்பு கொண்டு வாழ்வதுதானே ஆன்மீகம்.

நிருபர்: அதுதான் யாரிடம்?

கண் : கண்ணில் கண்ட மனிதரிடம்.

நிருபர்: அதுதான் இல்லை. கடவுளிடம்.

கண் : கண்ணுக்கு எட்டிய மனிதரிடம் காட்ட

முடியாத அன்பை. கண்ணுக்கு எட்டாத கடவுளிடம் காட்ட முடிகிறது என்பது மன தறிந்து பொய் சொல்வதாகும். மாய மாலமாகும்.

நிருபர் : இல்லை. ஆன்மீகமாகும்,

கண் : இது உங்கள் ஆன்மீகமாக இருக்கலாம். இதற்காக மனிதன் கூடி வாழக்கூடாது என்பது இல்லையே.

நிருபர்-2: இங்கு உடன்பிறப்புகளே, ஒரு வீட்டுப் பிள்ளைகளே கூடி வாழ முடியவில்லை. ஊர் கூடி வாழ முடியுமா?

கண்ணகி: இங்கு ஒரு வீட்டுப்பிள்ளைகள் என்ன, ஒரு கணவன் மனைவிக்குள்ளும், குற் றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்று தான் பொறுத்துக் கொள்கிறோம். சகித்துப் போகிறோம். ஆம், மன்னிக் கிறோம். மறக்கிறோம். இருந்தாலே உறவு. இவையே ஊர் கூடி வாழவும் வேண்டும். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. பிறகு என்ன?

நிரு : 'வாழ்த்துகிறோம்' அம்மா. வணக்கம்

புவனனின் இதர படைப்புகள்

1. பைபிளோ பைபிள் - 5 ரூபாய்
2. கீதையோ கீதை - 5 ரூபாய்
3. குரானோ குரான் - 4 ரூபாய்
4. களத்தில் கடவுளர்கள்! உலகம் யாருக்குச் சொந்தம்? (வழக்காடு மன்றம்) 6 ரூபாய்

நிர்வாகி
வாய்மையகம்
வாட்டர் டாங்கு சமீபம்
நாகர்கோவில்-692 001.

குறிப்பு: விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு

SAP